Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான் ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

021 222 3916, 0777 801038

(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 25 (11.09.2004) சனிக்கிழமை இதழ்:344

## படையினரின் யுத்தநிறுத்த வன்முறைகளால்

# தலைமையும் - தமிழ் மக்களும் பொறுமையிழந்து வருகின்றனர்!



### கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)



**விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டி சமாதான முயற்சிகளிலிருந்து விலக வைக்கும் நோக்குடனேயே புல்லுமலைத் தாக்குதல் இராணுவத்தினரால் நடத்தப்பட்டுள்ளது.**

**இத்தகைய சம்பவங்களால் தமிழரும் அவர்தம் தலைமையும் பொறுமையிழந்து வருவதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ட்ரொன் புறாவ்ஹொவ்டேக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

**அவர் அனுப்பியுள்ள கடிதத்தின் முழு விவரமும் வருமாறு –**

தமிழ் இளைஞர்கள் சிலர் உட்பட்ட அரச படையினர் 30 பேர் புல்லுமலையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண் பகுதிக்கு கடந்த 7 ஆம் திகதி இரவு 10 மணியளவில் சென்று தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்தி இந்தத் தாக்குதலை முறியடித்தனர். இதன்போது தாக்குதல் நடத்த வந்தவர்களில் இருவர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதியைத் தாக்க வந்தவர்கள் இலங்கை இராணுவ முகாம் ஒன்றிலிருந்தே வந்துள்ளனர். இவ்வாறு வந்தவர்களின் தாக்குதல் திட்டம் முறியடிக்கப்பட்டவுடன் அருகிலிருந்த கண்ணிவெடியகற்றும் (மக்) பணியாளர்கள் தங்கும் இடத்துக்குச் சென்ற இவர்கள், துப்பாக்கி முனையில் அந்தப் பணியாளர்களை அச்சுறுத்தி கொல்லப்பட்ட தமது சகாக்கள் இருவரது உடல்களை மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், அந்தப் பணியாளர்கள் வைத்திருந்த ஸ்ரெச்சரை எடுத்துவைத்திருந்த படையினர் அதனைக் கொண்டு சென்று உடல்களை எடுத்துவருமாறு வற்புறுத்திய போதும் பணியாளர்கள் மறுத்துவிட்டனர். உடனேயே தாக்க வந்தவர்கள் தமது துப்பாக்கிகளால் மக் பணியாளர்களைத் தாக்கியுள்ளனர்.

இதில் நான்கு பணியாளர்கள் படுகாயமடைந்தனர். எவ்வாறாயினும் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தலுக்குள்ளான பணியாளர்கள் சம்பவம் நடந்த இடத்துக்கு தமது வாகனத்தில் சென்று இரண்டு உடல்களையும் மீட்டு வந்தனர்.

இதன்பின்னர், (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்காக சொல்ஹெய்ம் வருகிறார்!

(கிளிநொச்சி)



நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக அரசு மற்றும் விடுதலைப் புலிகள்

## சீன பாதுகாப்பு உயர் அதிகாரிகள் குழு கொழும்பில் முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

சீனப்பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்களை



# சொல்ஹெய்ம் வருகிறார்!

(கிளிநொச்சி)



நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புடன் பேச்சுக்களை நடத்துவதற்காக நாளைமறுதினம் இலங்கை வரவுள்ளார்.

இவரது விஜயம் தொடர்பாக கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் நேற்று செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டது.

இந்த செய்திக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதாவது -

நாளை மறுதினம் கொழும்பு வரவுள்ள எரிக் சொல்ஹெய்ம் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அரச பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சி பிரமுகர்கள், சமூகப் பிரதிநிதிகளுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

சீனப்பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பு வந்த சீனப்பாதுகாப்பு அமைச்சின் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்றதாகத் தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்த முக்கிய கலந்துரையாடலில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் புத்தசாசன பொதுப்பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சின்



செயலாளர் சிறில் ஹேரத், இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சாந்த கொட்டேகொட, விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்; அடுத்த மாத இறுதியில் கைச்சாத்தாகும்!

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு அடுத்த மாத இறுதியில் கைச்சாத்திடப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன.

இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டில் - இரண்டு நாடுகளுக்கும் இடையில் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாற்றம் செய்வது, இராணுவப் பயிற்சி மற்றும் கடற்படை பாதுகாப்பு நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் அடங்கியுள்ளன.

பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பேச்சுக்களை நடத்துவதற்காக இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளது.

பெரும்பாலும் அடுத்த மாத இறுதியில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படக் கூடியளவுக்கு இந்த விடயத்தில் முன்னேற்றங்கள் எட்டப்பட்டிருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கச்சதீவில் இறக்கிவிடப்பட்ட 25 அகதிகளும் நேற்று மீட்பு!

(யாழ்ப்பாணம்)

இந்திய அகதிமுகாமில் தங்கியிருந்து - இழுவைப்படகு ஒன்றின் மூலம் தாயகம் திரும்பியவேளை கச்சதீவில் இறக்கிவிடப்பட்டு நிர்க்கதி நிலையில் இருந்த 18 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும் நேற்று மீட்கப்பட்டு நெடுந்தீவு பலநோக்கு. கூட்டுறவுச் சங்கத்தினரின் படகுமூலம் நெடுந்தீவுக்கு அழைத்துவரப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரம் கடற்பகுதியிலிருந்து இந்திய இழுவைப்படகு ஒன்றின்மூலம் புறப்பட்டிருந்த இவர்கள் கச்சதீவில் இறக்கிவிடப்பட்டிருந்தனர்.

தரையிறக்கப்பட்டவர்களில் மூவர் சேதமடைந்த படகொன்றின்மூலம் நேற்றுமுன்தினம் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

இவர்கள் வழங்கிய தகவலையடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

## ஐஸ்கிறீம் வகைகள் உண்பதை தவிர்க்குமாறு வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

கண்ட இடங்களில் ஐஸ்கிறீம் வாங்கி உண்பதை முற்றாகத் தவிர்க்குமாறு தமிழீழ சுகாதாரச் சேவையினர் கேட்டுள்ளனர்.

இன்று ஆலயத்திருவிழாக்களில் ஐஸ்கிறீம் பானங்களையே மக்கள் அதிகம் விரும்பி வாங்கி உண்கின்றனர். இவற்றினை சுகாதார முறைப்படி தயாரித்து, விற்பனை செய்யாத கடைகளில் வாங்கி உண்பதன் மூலம் தொற்றுநோய்கள் பரவக் காரணமாக அமைகின்றது.

எனவே - இவ்வாறான ஐஸ்கிறீம் வகைளை 'நீங்களும் உண்ணாதீர்கள் பிள்ளைச் செல்வங்களுக்கும் கொடுக்காதீர்கள்' எனத் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

## தமிழ்க் காங்கிரசின் செயற்குழுக் கூட்டம்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல செயற்குழு உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. சமகால அரசியல் நிலவரமும் கட்சி முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்களும் பற்றிய விடயங்கள் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (31)

## கணினி பயிற்சி நிலையத் திறப்பு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம், நலச்சேவைச் சங்கம் மற்றும் சாவகச்சேரி நகரசபை, ஆகியவற்றின் அனுசரணையுடன் இடம்பெறும் கணினிப் பயிற்சி நிலையத்திறப்பு விழா இன்று மாலை 4 மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தவிழாவுக்கு பிரதமவிருந்தினராக, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைத் தலைவர் கலாநிதி சி.மகேசனும், சிறப்பு விருந்தினராக வவுனியா நகரசபையின் செயலாளர் மு.செ. சரவணபவனும், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் செ. கலைவாணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (29)

## தமிழ்மொழிப்பாட ஆசிரியர்களுக்கு மேம்பாட்டுக்கான பயிற்சிநெறி!

தமிழ்மொழிப்பாட ஆசிரியர்களின் மேம்பாட்டுக்கான பயிற்சிநெறி தமிழ்மொழிக் கலைத்திறன் மேம்பாட்டுக் குழுவினால் சிறந்த முறையில் நடத்தப்படவுள்ளது.

இதன் ஆரம்பவிழா இன்று யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில், பேரவைச் செயலாளர் தி.பெரியதம்பி தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வின் பிரதம விருந்தினராக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் என்.அருண்மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி வகுப்பில் பங்குபற்றும் ஆசிரியர்கள் யாவரும் இந்த ஆரம்ப விழாவில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். ஆரம்ப விழாவில் பங்குபற்றாதவர்கள் தகுந்த காரணங்களைக் காட்டத்தவறும் பட்சத்தில் வகுப்புகளில் பங்குபற்ற விருப்பம் அற்றவர்களாகக் கணிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தெய்வீக இசையரங்கு

(மானிப்பாய்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 22 ஆம் நாள் நிகழ்வு நடைபெறும்

இ.்தநிகழ்வில் - எஸ்.நாகராஜா-பாட்டு, கே.பத்மநாதன் - வயலின், டானியல் வரதராஜன் - மிருதங்கம், எஸ்.சிவராம் - கெஞ்சிரா ஆகியோருடன் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். (100)

## கலைவிழா

(இளவாலை)

இளவாலை புனித யூதாததேயு இளையோர் மன்றம் நடத்தும் கலைவிழா நிகழ்வு - இன்று மாலை 7 மணிக்கு புனித யூதாததேயு ஆலய முன்றலில் நடைபெறும்.

இந்தநிகழ்வுக்கு - பிரதம விருந்தினராக திருமறைக் கலாமன்ற பொதுச்செயலாளர் யோன்சன் ராஜ்குமார், சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை அன்ரனிதாஸ், அருட்தந்தை பொனிபஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (41)

## நாளை மறுதினம் வர்த்தக நிலையங்களை மூடுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் நல்லூர் தேர்த் திருவிழா நடைபெறவுள்ளதால், அன்றையதினம் சகல வர்த்தக நிலையங்களையும் மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு சகல வர்த்தக உரிமையாளர்களையும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது.

## பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக, உயர் தேசிய முகாமைத்துவ பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10.30 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், பட்டியலில் பெயர் இடம்பெற்றவர்களும், இடம்பெறாதவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒன்றியத்தின் செயலாளர் ெ.தயாபரன் தெரிவித்துள்ளார்.

## திருநாள் திருப்பலி

துன்னாலை சதாசகாய அன்னை ஆலயத்தின் நவநாள் வழிபாடுகள் கரவெட்டிப் பங்குத்தந்தை அலோசியஸ் தலைமையில் நடைபெற்று வருகிறது. இதன் திருநாள் திருப்பலி நாளை காலை 7 மணிக்கு நடைபெறும். (13)


மக்கள் வங்கி
அறிவித்தல்

மக்கள் வங்கி PEOPLE'S BANK

மக்கள் வங்கி
ஊர்காவற்துறை கிளையில்
31.12.1984 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை
மீட்கப்படாத நகைகள் 2004 ஆம் ஆண்டு
செப்ரெம்பர் மாதம் 11.12.13.14 ஆம் திகதிகளில்
யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில்
காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
பகிரங்க ஏல விற்பனை
செய்யப்படும்.
பிரதேச முகாமையாளர், யாழ்ப்பாணம். (C/3080)



நாகம்ஸ் சுன்னாகம்
தனுஸ், சிந்துவானி, கருணாஸ் மற்றும் மணிவண்ணன் நடித்த

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரீக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம் (சி-2725)

திறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந் (இருவேடம்), குஷ்பு நடித்த
வீரம் விளைஞ்ச மண்ணு

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
காட்சி நேரம்: 11.00.2.45.6.00 (பு.நே.)
Strike Force (சி-2723)

The Royal Collge Of Jaffna
ஆங்கிலத்தில் சுலபமாக 6 மாத காலத்தில் கதைக்கப்பயில கட்டணம் மாதாந்தம் 150\=
By:விக்னேஸ்வரன் ஆச்சாரி:
426, (302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை (C/2734)



BOC
இலங்கை வங்கி
பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2003 ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் இம் மாதம் 25 ம், 26 ம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத் தருகின்றோம்.

* யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை.
* யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
* பருத்தித்துறை
* மானிப்பாய்
* சுன்னாகம்

இந்நகைகள் மீட்கப் படவேண்டிய கடைசித் திகதி 24.09.2004
அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.
உதவிப் பொது முகாமையாளர் (வட பிராந்தியம் - யாழ்ப்பாணம்)
11.09.2004 (C/3082)



சிறு விளம்பரம்

தவறிவிட்டது.

தர்மசோதி, ஜெயரூபன் (790788 417 V), சபாரத்தினம் புவனேஸ் வரி (805274182 V) ஆகிய எங்களது தேசிய அடையாள அட்டை கடந்த 04. 09. 2004 அன்று 750 இலக்க மினிபஸ்ஸில் காணாமற் போயுள்ளது. கண்டெடுத்தவர்கள் தின்சுவை, மந்திகை வைத்தியசாலை முன்பாக, மந்திகை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள : முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். C/3022)

# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஒன்பது பொலிஸார் கொழும்பில் கைது!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒன்பது பொலிஸாரை குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

சூதாட்ட விடுதி ஒன்றில் நடைபெற்ற கலவரத்தின்போது, இராணுவத்தினரைத் தாக்கியது தொடர்பாகவே அவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான ஆரம்ப கட்டவிசாரணைகளை மேற்கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பல குற்றச் செயல்களில் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

ஒரு சப் இன்ஸ்பெக்ரர் உட்பட கைதுசெய்யப்பட்ட இந்த ஒன்பது பேரும் தமிழ் மக்களை மிரட்டி - பணம் பறித்தல், ஆட்கடத்தல், அச்சுறுத்தல் போன்ற பல குற்றச்செயல்களில் ஈடுபட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பெரும்பான்மையைப் பெற்றுவிட்டதால் ஆட்சியைப்பற்றிக் கவலைப்படாமல் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்

## அரசிடம் ஐ.தே.கட்சி கோரிக்கை

நாடாளுமன்றத்தில் தாம் இப்போது பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்ற அரசாங்கம், ஆட்சியைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க முன்வர வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே கட்சியின் இந்த நிலைப்பாடு குறித்து - முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தால், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தமது முழுமையான ஆதரவை வழங்கும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுக்களின்போது பொதுவான விடயங்களே பேசப்பட்டன.

அரசாங்கம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய வெளிநாட்டவர்கள், இலங்கையில் கொள்வனவு செய்யும் காணிகளுக்கு நூறுவீத வரி அறவீட்டு சட்டமூலமானது, வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுள்ள இலங்கை நாட்டவர்களுக்குப் பாதகமானதாக அமையவுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் ஊதிகங்கள் தற்போதைய நிலையில் 18 ஆயிரம் ரூபாவரை உயர்த்தப்பட வேண்டும். ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால் கந்த- அன்று எதிர்க்கட்சியில் இருந்தபோது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின்படி 6200 ரூபாவரை உயர்த்தப்படவேண்டும் எனக் கோரியிருந்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த வரவு - செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு நிச்சயம்!

## அமைச்சர் மங்கள சமரவீர

அண்மையில் ஆளும் கூட்டணியில் இணைந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஓர் அமைச்சுப் பதவியும், இரு பிரதி அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணைந்தமை மூலம், சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அரசுக்குப் புதிய உற்சாகம் கிடைத்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஒரு அமைச்சுப் பதவியும், இரண்டு பிரதி அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவுள்ளது.

இவை தோட்டத்துறை சார்ந்ததாகவும், தோட்டத் தொழிலாளர் சார்ந்ததாகவும் அமையும்.

இதேவேளை - அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வானது அடுத்த வரவு - செலவுதிட்டத்துடன் அதிகரிக்கப்படும். இந்தச் சம்பள உயர்வு நிச்சயமானதாகும். அதனையிட்டு, உத்தியோகத்தர்கள் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெிவித்தார்.

### காவல்துறை உறுப்பினர்கள் விளக்கமறியலில் வைப்பு

திருகோணமலை - சேருவெல பகுதியில் நேற்றுமுன்தினம் மூதூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரண்டு தமிழீழக் காவல்துறை உறுப்பினர்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருமலை நகர நீதிவான் கணேசராசா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மூதூர் பொலிஸார் இவர்கள் இருவரையும் நேற்றையதினம் திருமலை நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பொலிஸாருக்கு விடுத்தார். தற்போது இவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (04)

### இசற் ஸ்கோர் விபரம் பிந்தியே வெளியாகும்

(கொழும்பு)

திட்டமிட்டபடி இசற் ஸ்கோர் புள்ளிவிபரங்களை வெளியிடமுடியாது போகும்நிலை உருவாகியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

கல்விசாரா ஊழியர்கள் நடத்திவரும் போராட்டத்தால், எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி பல்கலைக்கழகங்களுக்குப் புதிய மாணவர்களை இணைப்பதற்கான இசற் ஸ்கோர் புள்ளி விபரங்களை வெளியிடமுடியாமல் போகும். இதனால் பல்கலைக்கழகங்களுக்கான புதிய மாணவர் அனுமதியில் தாமதம் ஏற்படக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கலதாரி ஹோட்டல் குண்டு வெடிப்பு; குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை

கொழும்பு கலதாரி ஹோட்டல் மீது லொறி ஒன்றின்மூலம் குண்டுத் தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட தமிழ் இளைஞன் ஒருவர் கொழும்பு நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

கந்தசாமி பற்குணராஜா என்ற இளைஞர் மீதான குற்றச்சாட்டுக்குரிய சாட்சிகள் இல்லை எனத் தெரிவித்தே நீதிமன்றம் அவரை விடுவித்தது.

1997 ஒக்ரோபர் 15 ஆம் திகதி லொறி ஒன்றின்மூலம் கலதாரி ஹோட்டல் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதன்மூலம் 136 பேரின் மரணத்துக்குக் காரணமாக இருந்ததாகவும் இந்த இளைஞன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

# 60 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு 15 ஆம் திகதி முதல் விண்ணப்பிக்கலாம்

## பிரதி நிதியமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரக் கல்வியைப் பூர்த்தி செய்த அறுபதாயிரம் பேரை, அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்வதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாக நாடாளுமன்ற அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

க.பொ.த சாதாரணதரம், உயர்தரக் கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே, அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தக் கல்வித் தகுதியைப் பெற்றவர்கள் அரசாங்க சேவையில் நிரந்தர வேலைவாய்ப்புக்காக 15 ஆம் திகதிமுதல் விண்ணப்பங்களை அனுப்பலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

### அநுராதபுரத்தில் குண்டுகள் மீட்பு

அநுராதபுரம் எல்கட்டுவப் பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றில் இருந்து வெடிபொருட்கள், விமான எதிர்ப்பு துப்பாக்கிரவைகள், ஆர்.பி.ஜி குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டன.

குறித்த கால்வாயைச் சுத்தம் செய்தபோது - குண்டுகளும், தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் - வெடிபொருட்களும், குண்டுகளும் செயலிழக்கவைக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, விமான எதிர்ப்பு துப்பாக்கிரவை இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிததார்.

# இறுதித் தீர்வு அடிப்படையில் பேச்சு; கொழும்பில் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு

இடைக்கால நிர்வாக அமைப்புக்குப் பதிலாக இறுதித்தீர்வை அடிப்படையாகக் கொண்டு, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகப் பலகலைக்கழக வரிவுரையாளர் ஒன்றியம் என்ற அமைப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிககுக் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாபெரும் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அமைப்பு யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது, சந்தேகமின்றி நாட்டைப் பிரித்து, தனித் தமிழீழத்தைத் தோற்றுவிக்கும் என்பதனால், இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென, அரசைக் கேட்டுக்கொள்ளவுள்ள விரிவுரையாளர் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி சந்தன அபேரட்ண நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பரந்துபட்ட அளவில் நிகழும் வன்முறைகள் மற்றும் படுகொலைச் சம்பவங்களை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளோம்.

இதேவேளை - இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்கும்போது, இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தே)



திருகோணமலை பொது வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரசவ விடுதியை - யுனிசெப் பிராந்தியத் திட்ட அலுவலர் அசோக் நிகம் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# தற்கொலை தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்வது எப்படி?

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களிலிருந்து எப்படித் தங்களைப் பாதுகாப்பது என்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கும் செயலமர்வொன்று நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இந்தச் செயலமர்வில், அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பகுப்பாய்வாளர் நாயகம் டி.ஜீ.எஸ். குணதிலக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கவுரையாற்றினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி திசநாயக, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக குமாரதுங்க ஆகியோர் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விடியோப் படங்கள் காண்பிக்கப்பட்டு, இந்த விளக்கவுரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள விசேட பகுதியொன்றில் வைத்து இந்தச் செயலமர்வு - இரண்டு கட்டங்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் செயலமர்வு தொடர்பாகத் தமது கண்டனத்தை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் காலகட்டத்தில், இவ்வாறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கவேண்டிய அவசியம் என்ன என்றும் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

## 11 அகதிகள் நாடு திரும்பினர்

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பிலுள்ள மணற்திட்டியொன்றில் ,மீன்பிடிப் படகுகள் மூலம் வந்துசேர்ந்த 11 பேரைக் கடற்படையினர் மீட்டு வந்து, மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த புதன்கிழமை மன்னார் வந்த இவர்களை - நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றில் முன்னிறுத்தியபோது, அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

# 210 ஓட்டங்களால் நியூசிலாந்து அமெரிக்காவை தோற்கடித்தது!








நேற்று ஆரம்பமான மினி உலகக் கிண்ணப் போட்டியின் நியூசிலாந்து - அமெரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 210 ஓட்டங்களால் அமெரிக்க அணியைத் தோற்கடித்தது.



நாணயச் சுழற்சியில் வென்ற அமெரிக்க அணி, களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. இதனால் நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நியூசிலாந்து அணியின் சார்பில் அணித் தலைவர் பிளமிங் மற்றும் நதன் அஸ்லில் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.

இதில் அவ்வணி 25 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அணித் தலைவர் பிளமிங் 15 ஓட்டங்களுடன் றீட்டின் பந்துவீச்சில் றொமிரோ விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து அஸ்ரலுடன் மார்சல் இணைந்தார். ஆனாலும், மார்சலின் விக்கெட்டும் அணி 43 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் வீழ்த்தப்படடது. மார்சல் 11 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் றொமீரோவின் பந்து வீச்சில் டீசையிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



இதன்பின்னர் ஸ்ரைஸ், அஸ்ரலுடன் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்தார். இவர்கள் இருவரும் மிகச் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சடுதி யாக அதிகரித்தனர்.

இந்த நிலையில் 78 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரைஸ் ஆட்டமிழந்தார். அவ்வேளை அணி 206 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து அஸ்ரலுடன் ஹெயின்ஸ் இணைந்தார். ஆனாலும் ஹெயின்ஸ் மூன்று ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்தார். இவ்வேளை நியூசிலாந்து 4 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால், பின்னர் அஸ்ரலுடன் இணைந்த மக்மிலன் அமெரிக்க பந்து வீச்சாளர்களின் பந்துகளை சிக்ஸர்களாக அனுப்பிக்கொண்டிருந்தார். இந்த ஜோடி இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்து ஓட்டங்களைக் குவித்தது.

முடிவில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 347 ஓட்டங்களைக் குவித்தது. இதில் அமெரிக்க அணி 34 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக்கொடுத்தது. இதில் நதன் அஸ்ரல் ஆட்டமிழக்காமல் 151 பந்துகளில் 6 சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக 145, மக்மிலன் ஆட்டமிழக்காமல் 27 பந்துகளில் 7 சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாக 64, ஸ்ரைஸ் 75 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரபிள் 2. றீட் மற்றும் றொமிரோ இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன்பின் 348 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் களமிறங்கிய அமெரிக்க அணி, 42.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் நியூசிலாந்து 18 உதிரிகளைக் கொடுத்தது.

இவ்வணி சார்பாக அலெக்சாண்டர் 26, ஜோன்சன் 20, லம்பேட்39, டீசை 16 ஓட்டங்களைக் கூடுதலாகப பெற்றனர்.

பந்துவீச்சில் ஓரம் 5, விற்ரோறி 3, ஹெயின்ஸ் மற்றும் ஹரிஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதேவேளை - இங்கிலாந்து சிம்பாப்வே அணிகளுக்கிடையில் இடம் பெற்ற ஆட்டம், மழை காரணமாகத் தடைப்பட்டதனால், இன்று மீளவும் நடைபெறவுள்ளது. இதில் இங்கிலாந்து 38 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மழை குறுக்கிட்தால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

# மினி உலகக் கிண்ணத்தில் ஷேவாக் தொடக்க வீரர்!

## கங்கூலி தெரிவிப்பு

(லண்டன்)

இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக். இவர் தனது அனல் பறக்கும் ஆட்டத்தினால் அனைவரது மனதையும் கவர்ந்தவர். ஷேவாக் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் அதன் சொந்த மண்ணிலே முச்சதம் அடித்தவர்.

ஷேவாக் இதுவரை 101 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஆடி 2981 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 6 சதமும், 14 அரைச்சதமும் அடங்கும். அவர் சமீப காலமாக எந்த ஒரு போட்டியிலும் சரியாக ஆடவில்லை. வந்தோம், சென்றோம் என ஆடிக்கொண்டிருந்தார்.

இதனால் இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் லக்ஷ்மன் தொடக்க ஆட்டக்காரராக களமிறக்கப்பட்டார். இந்த நிலையில் ஐ.சி.சி கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் இன்று கென்யாவுடன் மோதுகிறது. இந்தப் போட்டியில் ஷேவாக் தொடக்க ஆட்டக்காரராக களமிறக்கப்படுவாரா? மாட்டாரா? என எதிர் பார்க்கப்பட்டது. இது தொடர்பாக கப்டன் கங்கூலி கூறியதாவது -

இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு ஆட்டங்களில் தோல்வியடைந்தோம். இதனால் துடுப்பாட்ட வரிசையை மாற்றலாம் என முடிவு செய்து லக்ஷ்மனை தொடக்க ஆட்டக்காரராக களமிறக்கினோம். அந்தத் தொடரில் ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றோம்.

இதன்மூலம் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மேலும் ஐ.சி.சி கிரிக்கெட் போட்டியில் தொடக்க ஆட்டக்காரராக ஷேவாக்தான் களமிறங்குவார். லக்ஷ்மன் இறங்கமாட்டார். அவர் தொடக்க வீரராக இறங்கி அதிக ஓட்டங்களைக் குவிக்கவில்லை.



ஆனாலும், அவர் நன்கு ஆடக்கூடியவர்தான். அவரது அனுபவம் வாய்ந்த ஆட்டம் கடந்த காலங்களில் பயன்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் நாங்கள் சிறப்பாக ஆடி வெற்றிபெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# தேசிய விளையாட்டுப் போட்டியில் யாழ். வீரருக்கு வெண்கலம்!

இலங்கையின் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றிய யாழ்.மாவட்ட விளையாட்டு வீரர் ஒருவர் குண்டெறிதல் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்.மாவட்ட வீரர் ஒருவர் - தேசிய விளையாட்டு விழாவில் பதக்கம் வென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தம்புள்ள மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தக் குண்டெறிதல் போட்டியில் - யாழ்.மாவட்ட வீரர் எம்.பிரதீப்குமார் என்பவரே மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

**இன்று நடைபெறும் ஆட்டம்**
**இந்தியா - கென்யா**
**மைதானம் - ரோஸ்பவுல்**



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சம்பந்தர் இல்ல வீரர்களைக் காணலாம்.

**அமெரிக்க ஓபன் ரெனிஸ்**

# காலிறுதி ஆட்டத்தில் அகாஷி தோல்வியுற்றார்!



நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் காலிறுதி ஆட்டத்தில் மோதிய ரோஜர் பெடரர் - அகாசியைத் தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரரும் - அமெரிக்க வீரர் ஆந்த்ரே அகாசியும் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் பெடரர் முதல், 3 ஆவது செட்டை கைப்பற்றினார். 2 ஆவது, 4 ஆவது செட்டை அகாசி கைப்பற்றியதால், கடைசி செட் மிக விறுவிறுப்பானது. முடிவில் பெடரர் 6-3, 2-6, 7-5, 3-6, 6-3 என்ற கணக்கில் அகாசியைத் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றைய காலிறுதி ஆட்டங்களில் டிம் ஹென்மன் (இங்கிலாந்து), டொமினிக்கை (ஸ்லோவாக்கியா) 6-1, 7-5, 7-5, 6-2 என்ற செட் கணக்கிலும், அவுஸ்ரேலிய வீரர் ஹெவிட், டொமிஹாசை (இங்கிலாந்து) 6-2, 6-2, 6-2 என்ற நேர் செட்டிலும் வென்று அரைறுதிக்கு முன்னேறினர்.

அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பெடரர் - டிம் ஹென்மன் மோதுகின்றார்கள். மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்ரேலிய வீரர் ஹெவிட்டுடன், அன்டி ரோட்டிக் (அமெரிக்கா) அல்லது ஜோகன்சன் (சுவீடன்) மோதுவர்.




# அத்தியார் இந்துக் கல்லூரியின் பவள விழா போட்டி முடிவுகள்!

அத்தியார் இந்துக் கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் போன்றவற்றுக்கான இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

உதைபந்தாட்டத்தில் 3 ஆம் இடத்துக்கான போட்டி முதலில் இடம்பெற்றது. இதில் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்தை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலயம் மோதியது.

ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டு 22 ஆவது நிமிடத்தில் நடராஜ ராமலிங்க வித்தியாலய அணி வீர் மதனரூபனால் முதலாவது கோல் அடிக்கப்பட்டது. இடைவேளை நேரத்தின் போது 1-0 என்ற கோல் கணக்கில் மீண்டும் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

இடைவேளையின் பின்னர் முதல் 11 ஆவது நிமிடத்தில் நடராஜா ராமலிங்க வித்தியாலய வீரர் நந்தராஜினால் ஒரு கோலும் 19, 23 ஆவது நிமிடங்களில் மதனரூபனால் 2 கோல்களும் அடிக்கப்பட்டு, நடராஜ ராமலிங்க வித்தியாலயம் இடைக்காடு மகா வித்தியாலயத்தை 4-0 என்றகோல் கணக்கில் தோற்கடித்து 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதைத் தொடர்ந்து இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியை எதிர்த்து புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் மோதியது.

இதில் இடைவேளைக்கு முன்னரும் பின்னரும் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலய அணியினருக்கு கோல அடிக்கும் வாய்ப்புக்கள் கிடைத்த போதும், அதனைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

இதனால் இரு அணிகளும் எவ்வித கோல்களும் அடிக்காத நிலையில் தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயத்தை 3-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

அதேதினம் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் இடம்பெற்றது. இதில் இடைக்காடு மகா வித்தியாலயத்தை எதிர்த்து ஆவரங்கால் ராமலிங்க மகா வித்தியாலயம் மோதியது.

இதில் நடராஜ ராமலிங்க வித்தியாலயம் இடைக்காடு மகா வித்தியாலயத்தை 13-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அத்தியார் இந்துக் கல்லூரியின் பவள விழாக் கிண்ணத்தை, சுவீகரித்துக் கொண்டது. (12)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, நாளை முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவி திருமதி ஏ.ரஞ்சனாமதி தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (14)

## நாடுகளும் பழமொழிகளும்

பணம் சேர்ப்பவன் ஒருபோதும் கவலைப் படமாட்டான். கவலைப்படுபவன் ஒருபோதும் பணம் சேர்க்க மாட்டான்.

- சீனப் பழமொழி

இந்த உலகில் அழகானவற்றைப் பற்றிக் கொள்கிறோம். பயனுள்ளதை தள்ளி விடுகிறோம்.

- பிரெஞ்சுப் பழமொழி

உங்கள் பயம் உங்களிடமே இருக்கட்டும். உங்கள் தைரியத்தை மட்டும் பிறருக்கு புகட்டுங்கள்.

- இங்கிலாந்துப் பழமொழி

மற்றவர்களின் குறைகளே உங்களை வழி நடத்தும் ஆசான்கள்

- எஸ்தோனியா பழமொழி

ம.மயூரி
தரம் - 10
பண்டத்தரிப்பு மகளிர் உயர்கல்லூரி

## பொது அறிவு

1. பேசத் தெரிந்த பறவைகள் இரண்டு தருக?
   கிளி, மைனா.
2. சிரிக்கத் தெரிந்த விலங்கு எது?
   மனிதன்.
3. உலகில் மிக நீளமான நதி எது?
   நைல்நதி.
4. ஐவகை நிலங்கள் எவை?
   குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
5. விண்வெளிக்குச் சென்ற நாயின் பெயர் என்ன?
   லைகா.

சி.குருநாத்
தரம் - 5
யாழ்ப்பாணக் கல்லூரி

## சித்திரக் கதை

### நட்பின் சிறப்பு

எவ்வளவுதான் பொன்னும், பொருளும் கிடைத்தாலும், அதனைப் பங்கிட்டுக்கொடுக்கும் தன்மை நண்பருக்கு மட்டும் தான் உண்டு. அது தான் நட்பின் சிறப்பு




(தொடரும்...)

கதை
ஓவியம்

## My Friend

My friend is Pratheep.
He is nine years old.
He comes from Magal Road,
Ariyalai, Jaffna.
He can sing well.
He is kind and helpful to every body.
I love my friend very much.

**Rameshwar**
**Gread - 4**
**St. John College Jaffna**

## கல்வி

காலம் எல்லாம் துணையாக
கல்வி என்னும் அழகுச்
செல்வத்தை
பால பருவத்திலிருந்தே
படித்துப் படித்துத் தேடிடுவோம்
போகும் இடத்தில் புகழுண்டு
பொன் பொருளால் பகையுண்டு
சாகும் காலம் வரைக்கும்
கல்விதனை
கருத்துடன் நாம் கற்றிடுவோம்

பு.ஜெஸ்லி
வதிரி திரு இருதயக் கல்லூரி

## ஆற்றல் என்றால் என்ன?

ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் சக்தி அல்லது ஆற்றல் உண்டு. இந்த ஆற்றல் மிகவும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது. ஆற்றல் எங்கிருந்து கிடைக்கிறது. சூரியன், மின்சாரம், நெருப்பு, இயந்திரங்கள் - இது தவிர அனுசக்தி, இரசாயன சக்தி, பிராணிகள் ஆற்றல் எனப் பலவகை ஆற்றல்கள் உள்ளன.

இயந்திர ஆற்றலில் எதை எதைச் செய்யலாம்? இயந்திரங்கள் வேலை செய்யும் போது வெளிப்படும் ஆற்றல்... சக்கரங்கள் சூழலும் போது கிடைக்கும் ஆற்றல்.... பிராணிகள் மற்றும் மனிதர்களின் ஆற்றலும் இயந்திர ஆற்றலில் வருகின்றது.

பெரிய பலூன்கள், ஜெட் எஞ்சின்கள் வெப்ப ஆற்றலைச் சேர்ந்தது. ஒளி ஆற்றல் சூரியனிலிருந்து வெளிப்படுவது. கண்ணுக்குத் தெரியாத - மின்காந்த அலைகள், ரேடியோ அலைகள், எக்ஸ்ரே கதிர்கள் கூட இந்த ஆற்றலில் உண்டு.

அனு ஆற்றல் ஆபத்தானது. ஆக்கத்துக்கு மட்டும் தான் பயன்படுத்தலாம். அழிவுக்கப் பயன்படுத்தக் கூடாது. காந்தம் மற்றும் மின்சாரம் - மின்சார ஆற்றலில் வரும்.

இரசாயன ஆற்றல் உணவு மற்றும் எரிபொருட்களில் இருந்து கிடைக்கிறது. உணவு எமக்குச் சக்தியைத் தருகின்றது. எண்ணெய், நிலக்கரி, மரம், எரிவாயு முதலியவை இயந்திரங்கள் இயக்கவும், வெப்பத்தைக் கொடுக்கவும் பயன்படுகின்றது.

'ஆற்றலைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

இங்கே மடிக்கவும்





**சிந்தனைக்கு!**

வாழ்க்கை என்பது அனுபவம். அதனை அனுபவிக்கத் தெரியாதவன் எதுவுமே தெரியாதவனாகிறான்.

# சிறுவர் அரங்கம்

# ஜிம்மி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஜிம்மி உன்னை நான் நல்ல சிறுவன் என்றல்லவா நினைத்தேன். நீ இவ்வளவு பொல்லாதவனாக இருக்கிறாயே. உன்னைவிட பலம் குறைந்த இந்த அப்பாவிக் கறுப்பனைத் துன்புறுத்த நினைக்கிறாயே என்று நாயண்ணன் - என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் நிமிர்ந்து நாயண்ணனின் குட்டி மரமீட்டுக் கூரையில் நின்றபடி கறுப்பனைப் பார்த்தேன்.

எதுவுமே அறியாத அப்பாவிபோல அவன் நின்றிருந்தான். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று சொல்லுவார்களே அதைப் போலத்தான்.

நாயண்ணனிடம் நடந்ததை எல்லாம் சொல்ல நினைத்தேன். அதற்குள் அவர் சரி சரி நடந்தது போகட்டும், இனிமேலாவது திருந்தி நட என்று எனக்குப் புத்திமதி சொல்லிவிட்டு, எங்கோ ஓடிச் சென்றார்.

வேறு வழியில்லாது கறுப்பனை ஒருமுறை முறைத்து விட்டு, சேவல் அண்ணனுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தேன்.



கறுப்பன் குறும்பன் மட்டுமல்ல, பொல்லாத தந்திரக்காரனுங்கூட என்பது அன்றைக்கு எனக்கு நன்றாக விளங்கியது.

தேனீபாடிமிருந்து தப்பித்திட ஓடியது, குளத்திலே குதித்து மூழ்கியது கடைசியில் நாயண்ணனின் கோபத்துக்கு ஆளானது எல்லாம் சேர்ந்து எனது உடலில் அளவில்லாத சோர்வை உண்டாக்கின.

சேவல் அண்ணனிடமிருந்து விடைபெற்று, வீட்டு வாசல் படியில் ஏறும் வேளை எனது பக்கத்து கட்டிலின் மேல் தொப்பென்று விழுந்து படுத்தேன். உடலில் ஏற்பட்டிருந்த களைப்பு - படுத்ததுமே கண்களை இருளச் செய்தது. ஆழ்ந்து நித்திரை செய்தேன்.

ஆனால், அன்றைக்கு கவையான எலும்பைக் கடிப்பது போல எனக்கு கனவு தோன்றவில்லை. மாறாகக் கோபம் கொண்டு துரத்தி வரும் தேனீயாரும், கறுப்பனின் பொல்லாத முகமுமே மாறிமாறி எனது கண்ணெதிரே தோன்றின.



கறுப்பனின் பொல்லாத முகத்தைக் கனவிலே கண்டதுமே, எனது தூக்கம் இருந்த இடம் தெரியாது மறைந்து போனது.

கோபத்தோடு எழுந்து அமர்ந்தேன். எவ்வளவு நேரத்துக்குத்தான் நாயண்ணனின் வீட்டுக் கூரையிலே கறுப்பன் அமர்ந்திருப்பான். பசியெடுத்தால் இங்குதானே வரவேண்டும் என்று நினைத்தேன்.

இன்றைக்கு வரட்டும், எல்லாத்துக்கும் சேர்த்து அவனுக்கு நல்லதொரு பாடம் கற்பிக்கிறேன்.

ஆமிரும், எனக்கு சிறிது பயமாயிருந்தது. தந்திரக்காரனான கறுப்பன் - நான் செய்வதை எல்லாம் நாயண்ணனிடம் நிச்சயமாகப் போய்ச் சொல்லுவான். அதைக் கேட்டு அவர் என் மேல் கோபம் கொள்வார்.

சரி! எது நடந்தாலும் பரவாயில்லை. முதலில் இந்தக் கறுப்பனுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும். பின்னர் வருவதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் எனத் தீர்மானமாக முடிவு செய்துகொண்டேன்.

நான் நினைத்ததுபோலவே இரவுச் சாப்பாட்டு நேரத்துக்குச் சரியாகக் கறுப்பன் வீடு வந்து சேர்ந்தான்.

வழக்கம் போலவே மியாவ், மியாவ் என்று அசத்தொண்டையால் கத்தி, என்னை வளர்த்து வரும் அம்மாவிடம் தனக்குச் சாப்பாடு வைக்குமாறு கேட்டு - வாங்கிச் சாப்பிட்டான்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டு எதுவுமே அறியாது ஆழ்ந்த நித்திரை செய்பவனைப்போல நான் நன்றாக நடிக்கத் தொடங்கினேன்.

வயிறு முட்டச் சாப்பிட்டு முடித்த கறுப்பன் - இப்போது ஓசைப் படாது நடந்து என்னருகே வந்தான். வந்தவன் என்னைப் பார்த்து ஜிம்மியாரே, ஜிம்மியாரே என்ன செய்கிறீர் தேனீயார் துரத்த நீரும் பயந்து ஓடினீர்

ஜிம்மியாரே, ஜிம்மியாரே என்ன செய்கிறீர்... என்று பாட்டுப் பாடினான்.

அதற்கு மேலும் பொறுமையாக இருந்திட என்னால் முடியவில்லை. வேகமாய் எழுந்து கறுப்பன் மேல் பாய்ந்தேன். எனது திடீர் தாக்குதலால் கறுப்பன் அதிர்ச்சி மிகக்கொண்டான். கறுப்பனின் கன்னத்திலே பளாரென்று ஒரு அடி கொடுத்தேன்.

பதிலுக்கு அவனும் எனது முகத்திலே பிராண்ட முயன்றான். சாதுரியமாக அவனது முயற்சியிலிருந்து நான் தப்பித்துக் கொண்டேன்.

சில நிமிட நேரமாகத் தொடர்ந்த சண்டையில் தோல்வியைத் தழுவிக் கொண்ட கறுப்பன் - ஜன்னல் வழியாகத் தப்பி ஓட்டம் பிடித்தான்.

கறுப்பா இனிமேல் ஏதாவது குறும்பு வேலைகளை நீ செய்வாயானால், இன்று நடந்தது தான் தொடர்ந்து நடக்கும் என்று உரத்த குரலில் எச்சரிக்கை செய்துவிட்டுத் திரும்பினேன்.



சாப்பிட்டு முடித்த விட்டு, வரவேற்பறை நிலத்திலே வசதியாக அமர்ந்துகொண்டேன். பொல்லாத கறுப்பன் இனியாவது திருந்தி நடந்தால் மிகவும் நல்லாயிருக்கும் என நினைத்தேன்.

நான் நினைத்தது போலவே நடந்தது.

இப்போது கறுப்பன் முன்னைப்போல என்னைத் தொந்தரவு செய்வதில்லை. மியாவ், மியாவ் என்று அசத் தொண்டையால் கத்தி ஆர்ப்பாட்டமும் செய்வதில்லை. பசித்தாலுங்கூட அமைதியாக இருக்கப் பழகிக்கொண்டான். அவனது நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது.

சிவப்புக் கொண்டைச் சேவல் அண்ணனும், கண்டெலியாரும் கறுப்பனின் பெரும் மாற்றத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஜிம்மி உனக்குத்தான் நாங்கள் நன்றி சொல்லவேண்டும் என்று இருவரும் என்னிடம் சொன்னார்கள்.

இப்படியாக அந்தச் சம்பவம் நடந்து முடிந்தது எனது அருமை நண்பர்களான உங்களுக்கு நல்லதொரு கதையை என்னால் சொல்ல முடிந்தது.

நண்பர்களே! உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது எனது வீட்டுக்கு நிச்சயமாக வாருங்கள் கறுப்பனையும் நான் அறிமுகம் செய்து வைக்கிறேன்.

**யோ.சத்யன்**

- முற்றும்.

# வீடு கட்டும் விலங்குகள்

எந்தப் படிப்பும் படிக்காமல், நேர்த்தியாக எல்லா வசதிகளுடனும் கூடிய வீடுகளை சில விலங்குகள் கட்டுகின்றன. அவற்றின் கலைத்திறனைப் பற்றி நீங்கள் அறிந்து ஆச்சரியப்படப் போகின்றீர்கள்!



அகன்ற வால், மென்மையான ரோமம், எலி போன்ற தோற்றம் உடையது பீவர்ஸ் எனும் விலங்கு. அணைகளையும், கட்டடங்களையும் இது எளிதாக எழுப்பும்.

இந்த விலங்கின் பற்கள் சிறியது. ஆனாலும், வலுவானது. இந்தப் பற்களைக் கொண்டு மரக்கிளைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுக்கும். இவற்றை ஓடைகளின் வழியே அடுத்த கரைக்கு அனுப்பி வைக்கும். வாயில் போட்டு எடுத்து வரும் கற்களை, சேறுடன் குழைத்து அணை போன்ற வீட்டைக் கட்டும். இது தரையிலிருந்து 5 அடி உயரத்தில் இருக்கும்.

இந்த வீடுகள் கோட்டை போல அமைந்து, அதனை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கின்றன.



எலி வளையைப் பற்றி எமக்குத் தெரியும் 225 அடி நீளமுள்ள பொந்தை - அது இரவோடு இரவாகத் தோண்டும்.

சுருசுருப்புடையது. தன் வீட்டுக்குச் செல்ல இரு வழிகளை அமைக்கின்றன. ஒன்று நேர்வழிப் பாதை. மற்றொன்று அவசர வழிப்பாதை. வீட்டுக்கு அதிக விருந்தினர்கள் வந்தால், இடநெருக்கடியை சமாளிக்க வளையை விரிவுபடுத்தும். இவை தோண்டிக் குவிக்கும் மண் சிறு குன்று போல காட்சி அளிக்கும்.

ஆபிரிக்கா, ஆசியா கண்டங்களில் 'ஜெர்டில்ஸ்' என்னும் மற்றொரு வினோத விலங்கு காணப்படுகிறது. இந்த விலங்கின் வீடுகள் பல அறைகளைக் கொண்டது. அறைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், புதுப்பிக்கவும் இவற்றுக்குத் தெரியும்.

உணவுப் பற்றாக்குறை, வெள்ளப்பெருக்கு முதலிய அவசர காலங்களில் வேறு அறைக்கு இடம் மாற்றி, தங்களைக் காத்துக்கொள்கின்றன. எலி போன்ற தோற்றமுடையது 'லெம்மிங்ஸ்' என்னும் விலங்கு. வீட்டுக்கு வரும் விருந்தினர்களை இது இன்முகத்துடன் வரவேற்கிறது. பெரிய வரவேற்பு அறை, உணவுகளைச் சேமித்து வைக்க குதிர், தனியான கழிவறை முதலிய வற்றை உருவாக்கிக் கொண்டு, இவை வாழ்க்கை நடத்துகின்றன. புழுக்களைச் சேகரித்து, நகர வீடாமல் செய்து, உணவுப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் இவற்றை உட்கொண்டு பசியாறுகின்றன. அழுக்கேறிய தன் உடலை முடிகளாலேயே சுத்தப்படுத்திக் கொள்ளும். (தொடரும்...)

# மூளைக்கு வேலை

ஒவ்வொரு பெட்டியிலும் 3 பொம்மைகள். அவ்வாறு 10 பெட்டிகள். ஒவ்வொரு பெட்டியிலும் 2 பொம்மைகள். அவ்வாறு 10 பெட்டிகள். ஒவ்வொரு பெட்டியிலும் 1 பொம்மை. அவ்வாறு 10 பெட்டிகள்.

மூன்று பேருக்குப் பங்குபோட வேண்டும். ஒவ்வொருவருக்கும் சமமான எண்ணிக்கையில் பெட்டிகள் கிடைக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் சமமான எண்ணிக்கையில் பொம்மைகள் கிடைக்க வேண்டும். பெட்டியைத் திறக்கக்கூடாது. பெட்டியுடன் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் எப்படிப் பிரித்துக் கொடுக்கலாம்?

மூளைக்கு வேலை சென்றவார விடை



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்





# அன்புள்ள சிறுவர்களே!

ஒருவர் மற்றொருவருக்குத் தெரிவிக்க விரும்பும் செய்தியை அல்லது உள்ளத்து உணர்வுகளை எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பும் தாள் கடிதம் எனப்படுகிறது.

கடிதங்கள் தூர இடங்களிலிருப்பவர்களை அல்லது பிரிந்திருப்பவர்களிடையே தொடர்பை ஏற்படுத்த உதவி புரிகின்றது.

எங்கள் எல்லோருக்கும் கடிதம் வாசிப்பதென்றால் விருப்பம். அதுவும் தொலைவில் இருப்பவர்கள், எங்களுக்கு விருப்பமானவர்கள் கடிதம் எழுதியிருந்தால் இன்னும் சந்தோஷமாக வாசிப்போம்.

கடிதங்கள் மூலம் உங்களுடைய செய்திகள் அவர்களுக்கும், அவர்களுடைய செய்திகள் உங்களுக்குமிடையே பகிரப்படுகின்றது. இவ்வாறு தொடர்புகள் பேணப்படுவதன் மூலம் உறவுகள், நட்பு பலப்படுகிறது.

தனிப்பட்ட உறவு ரீதியான கடிதங்கள், தொழில் ரீதியான கடிதங்கள் எனப் பல காரணங்களுக்காக கடிதங்கள் எழுதப்படுகின்றன. தனிப்பட்ட உறவு ரீதியான கடிதங்களின் உள்ளடக்கம் பல வகைப்பட்டதாக இருக்கும்.

இவ்வாறு தனிப்பட்ட ரீதியில் பிரபலமானவர்களால் எழுதப்பட்ட கடிதங்கள் - புத்தகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இதில், குறிப்பிடக்கூடிய கடிதத் தொகுப்பு- பாரத நாட்டின் பிரதமராகவிருந்த மறைந்த ஜவர்ஹர்லால் நேரு எழுதிய கடிதங்கள்.

இந்தக் கடிதங்கள் அவர் சிறையில் இருந்தபொழுது தனது 10 வயது மகளான இந்திராகாந்திக்கு எழுதியவை. அவருக்கு மட்டுமல்ல, அவரைப் போன்ற பிள்ளை களும் படித்தறிந்து கொள்வதற்காக, பூமியின் ஆரம்பகால வரலாறு பற்றி எழுதியிருந்தார்.

இன்று கணினிகள் மூலமும், கடிதங்கள் பரிமாறப்படுகின்றது. அதனை நாம் E-mail என்று அழைக்கிறோம்.

மற்றவர்கள் எழுதும் கடிதங்களை வாசிக்க எமக்குப் பிடிக்கும் என்றால், அவர்களுக்கும் எங்களுடைய கடிதங்களை வாசிக்கப் பிடிக்கும்தானே. எனவே, நாங்களும் கடிதங்கள் எழுத வேண்டும். இதன்மூலம் உறவுகள், நட்புகளைத் தொடர்ந்து பேணுவோம்.

- பாசமுடன் - சாரு அக்கா

# செவ்வாயில் தண்ணீர் ஆதாரத்தை கண்டறிந்தது ஸ்பிரிட் விண்கலம்

செவ்வாய்க் கிரகத்தில் - முன்பு தண்ணீர் இருந்ததற்கான மற்றுமொரு ஆதாரத்தை நாஸாவின் 'ஸ்பிரிட்' விண்கலம் கண்டறிந்துள்ளது.

கிரகத்தின் - நிலப்பரப்பின் கீழ்ப்பகுதியில் உப்புப் படிவங்களை அது கண்டுபிடித்துள்ளது. இதன் மூலம் செவ்வாய்க்கிரகத்தில் முன்பொரு காலத்தில் தண்ணீர் இருந்தது குறித்த ஆய்வில், முன்னேற்றம் காணப்பட்டது.

கிரகத்தில் 'ஸ்பிரிட்' விண்கலம் தோண்டிய மிகப் பெரிய பள்ளத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருட்களில் - உப்புப் படிவங்களும் காணப்பட்டன. முன்பொருகாலத்தில் இங்கு தண்ணீர் இருந்தது. அது வற்றியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தி.ஜெனத்குமரன்
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# உங்கள் கைவண்ணம்



ரி.பிரதாப்
ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி.



ப.கஜேந்தினி, தரம் - 9
குப்பிளான் விக்னேஸ்வரா
மகா வித்தியாலயம்.

# நட்பால் சாதிக்கலாம்

வேலன் வீடு நாய் எலி குஞ்சுகள் பூனை நிலா

[வேலன்] [வீடு]க் காவலுக்கு ஒரு [நாய்] வளர்த்தான். [வீ]டில் [எலி]த் தொல்லை அதிகம் இருந்தது. [வேலன்] [எலி]ப் பொறி வைத்துப் பயனில்லை [வேலன்]க்கு [பூனை] வளர்க்கும் யோசனை வந்தது. ஒரு [பூனை]யை வாங்கிக் கொண்டு [வீ]டிற்கு வந்தான். [பூனை]யைக் கண்ட [நாய்]க்கு கோபம் வந்தது. [நாய்] இன் கோபத்தைப் பார்த்து [பூனை] நடுங்கியது. ஏற்கனவே [நாய்]க்குப் பயந்திருந்த [எலி]க்கு இந்தக் காட்சி மிகுந்த கிலியை உண்டாக்கியது. ஆனால், [நாய்] யிடம் உள்ள பயத்தில் [பூனை] யால் [எலி] யை வேட்டையாட முடியவில்லை. இதை உணர்ந்த [எலி], [பூனை] பிடிக்க வரும்போதெல்லாம் அதோ [நாய்] என்று கூற, [பூனை] [எலி]யைப் பிடிப்பதை விட்டு விட்டு, ஓட்டம் பிடித்தது [பூனை] வந்தும் [எலி]த் தொல்லை குறையாததைக் கண்ட [வேலன்] 2 நாட்கள் கண்காணித்தான். காரணம் புரிந்தது. [பூனை] யையும், [நாய்] யையும் அழைத்து, இரண்டுக்கும் நட்பு ஏற்படுத்தினான். 2 நாட்களில் [பூனை] யும், [நாய்] யும் நண்பர்களாயின. [எலி] இனிமேல் இங்கிருந்தால் ஆபத்து என்பதை உணர்ந்தது. அன்று [நிலா] ஒளியில் தன் [குஞ்சு]களை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பியது [எலி].

# எழுச்சிப் பேரவை செயற்பாடுகள் மூலம் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்

## பேரவையின் சங்கம நிகழ்வில் செம்மணன்

(நெடுந்தீவு)

**யுத்தம் எம்மீது திணிக்கப்படுமாயின், அதன் மூலம் அழியப்போவது சிங்கள தேசமும், இராணுவத்தினருமே என்பதை அவர்கள் அறிந்திருக்கவேண்டும். இதற்காக எமது தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும் என, நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வில் யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -**

தலைவரின் சிந்தனையில் இருந்து உருவாக்கப்பட்ட தேசிய எழுச்சிப் பேரவை தனது முழுமையான செயற்பாடுகளைத் தற்போதைய நிலையில் முற்றுமுழுதாக செயற்படுத்த முடியாதுள்ளது.

தேசியம் வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும், போராட்டம் வலுவாக்கப்படவேண்டும் என்பதற்காகவும் மக்கள் ஓரணியில் திரள வேண்டும்.

கடந்த காலங்களில் தீவகத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அவை முழுமை பெறவில்லை. போக்குவரத்து, கல்வி மின்சாரம் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் எனப் பல்வேறு பிரச்சினைகளை தீவகமக்கள் எதிர்நோக் குகின்றனர்.

தற்போதைய யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் கிடைத்திருந்தால், தேசிய எழுச்சிப்பேரவை என்பது வலுவுள்ளதாக இருந்து, பொருளாதாரம் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கும். இருப்பினும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க இயன்றளவு முயற்சி எடுப்போம்.

எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளாமல் எமது தேவைகளைப் பூர்த்தி செய்வது என்பது சிரமமான விடயம்தான்.

எனவே, சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு கிடைக்காது இழுத்தடிக்கப்பட்டு வந்தமையால், நாம் போராட்டத்தை ஆயுதப்போராட்டமாக மாற்றிக்கொண்டோமே தவிர, நாமாக இதனை வலிந்து ஏற்றுக் கொண்டு இழுத்துச் செல்லவில்லை.

மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருளாதார வளம் எம்மிடம் இல்லை. மக்களது நிதி மூலமே எமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றோம். விடுதலை கிடைத்தபின் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும். அதற்கென எல்லோரும் ஒட்டு மொத்தமாக ஒத்துழைத்து, தலைவரின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும்.

அனைவரதும் ஒட்டுமொத்த பலமே இன்றைய சூழலுக்கு வழி சமைத்துள்ளது. பலம் சிதறடிக்கப் பட்டால், விளைவுகள் மோசமாகலாம். புலம்பெயர்ந்தோர், இங்கு வாழ்வோர் என அனைவரதும் ஒட்டுமொத்த பலம் வலுவானதாகவே உள்ளது. இந்தப் பலம் மூலமாகத்தான் எமது தேவைகளை முன்கொண்டுவர முடியும்.

எனவே, இந்தத் தேசிய எழுச்சிப் பேரவைமூலம் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துங்கள், தடைகளும், நெருக்கடிகளும், நீண்ட காலமானது. இது எமக்கு புதியது அல்ல. இதனை உடைத்து விடுதலைபெற உங்களது பங்களிப்பு முக்கியம்.

யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். இதன் விளைவுகளை சிங்கள தேசமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தனைக்கும் மேலாக மக்கள் அனைவரும் தலைவரின் கரங்களை என்றுமே பலப்படுத்த



வேண்டும் எனத் தெரிவித்தார். (113)

### சங்கரத்தை பகுதிக்கு வலுக்குறைந்த மின்சாரம்

சங்கரத்தைப் பகுதியில் தினமும் மின்பாவனை அதிகமாக உள்ள நேரத்தில் மிகவும் வலுக்குறைந்த மின்சாரமே வழங்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

சங்கரத்தை குளத்தை அண்மித்த பகுதிகளில் இரவு 6 மணி முதல் 9 மணி வரை மின் பாவனை உச்சமாகக் காணப்படும் நேரத்தில் மிகவும் வலுக்குறைந்த மின்சாரமே வழங்கப்படுவதால், இந்தப் பகுதி மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நேரங்களில் மின் குமிழ்கள் மிகக்குறைந்த ஒளியுடனே ஒளிர்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஏனவே மின்சார சபை அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு இந்தப் பகுதிக்கான மின் விநியோகத்தைச் சீராக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (207)

### எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர்

# பிரதம தபாலகம் திறக்கப்படாவிட்டால் வியாழனன்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, இதுவரைகாலமும் திறந்து வைக்கப்படாதிருக்கும் பிரதம தபாலக வளாகத்தை உடனடியாகத் திறக்க ஆவன செய்யுமாறு, வட பிரதேச அஞ்சல் மா அதிபருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக புதிய வாளகத்தை திறந்து வைக்காதுவிட்டால், மறுநாள் 16ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும், அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகில இலங்கை தொலைத் தொடர்பு சேவையாளர் சங்க யாழ். மாவட்டக்கிளை, அகில இலங்கை தபால் உத்தியோகத்தர் சங்க வட பிரதேச கிளையில், அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்க வடபிரதேச கிளை ஆகியன இணைந்தே இந்த மகஜரை அனுப்பி உள்ளன.

தற்போது யாழ். மாவட்ட பிரதம அஞ்சல் அலுவலகம் இயங்கும் கட்டடத்தில் போதிய இடவசதி இல்லாததனால், தாம் மிகவும் நெருக்கடியை அனுபவிப்பதாகவும், போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதியில் தற்போதைய அலுவலகம் இருப்பதனால், பொது மக்கள் மிகவும் சிரமம் அடைவதோடு, விபத்துக்களைச் சந்திக்கும் சம்பவங்களும் அடிக்கடி ஏற்படுவதாகவும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், வடபிரதேச பிரதி அஞ்சல் மா அதிபர், புதிய தபாலகக் கட்டடத்தை விரைவாக திறப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது. (31)

# தற்காலிகமாக வசிக்கும் பிரதேசத்தில் நிவாரண உதவிகளைப் பெறமுடியாது!

தமது சொந்தப் பிரதேசங்களை விட்டு வேறு பிரதேசங்களில் வசிப்பவர்கள் இனி வருங்காலங்களில் தாம் தற்காலிகமாக வசிக்கும் பிரதேசங்களில் நிவாரண உதவிகளைப் பெறமுடியாது என யாழ். பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

பல குடும்பங்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் குடியேறக்கூடிய வசதி இருந்தும், நீண்ட காலமாக இடம்பெயர்ந்து வெவ்வேறு தேவைகளுக்காக யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் வசித்து வருகின்றனர்.

அவர்கள் தமது மீள்குடியமர்வுக் கொடுப்பனவு, ஓய்வூதியக் கொடுப்பனவு, நட்டஈடு கொடுப்பனவு ஆகியவற்றுக்கு தமது சொந்த பிரதேச செயலகங்களை நாடிவிட்டு நிவாரணம் பெறுவதற்கு மட்டும் தாம் தற்காலிகமாக தங்கியிருக்கும் பிரதேச செயலகங்களை நாடுகின்றார்கள்.

இந்தச் செயற்பாடு நிர்வாக ரீதியிலான நெருக்கடிகளை தோற்றுவிப்பதோடு, சில பிரதேசங்கள் மக்களின்மை காரணமாக வுளர்ச்சியற்ற நிலையும் ஏற்படுவதாக மாறி வருகின்றன.

இதனைத் தடுக்கும் முகமாக இனி வருங்காலங்களில் தமது பிரதேசங்களுக்கு மீளக்குடியமர வசதியுள்ளவர்கள் தங்களுக்கான நிவாரண உதவிகளை அவரவர் பிரதேசத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

ஏப்ரல் மாதத்துக்கான நிவாரண விநியோகத்திலிருந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படலாம் என யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# சாரணர்களுக்கான பாசறை விழாவும் குருளைச் சாரணர் வெளிக்கள நாளும்

சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நிகழ்வும் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் சாரணர் துருப்புக்கள் மற்றும் குருளைச் சாரணர் குழுக்கள் தமது பெயர்ப்பட்டியலை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் முழுப் பெயர், பிறந்த திகதி, சாரணர் தரம் என்பவற்றை உள்ளடக்கியதாக மூன்று பிரதிகளை அனுப்பிவைக்க வேண்டும்.

பாசறைப் பதிவுப் பணம் சாரணர் தலைவர்கள் 50 ரூபாவும், குருளைச் சாரணர்கள் 25 ரூபாவும் செலுத்த வேண்டும்.

2004 - 2005ஆம் ஆண்டுக்கான சாரணர் மதிப்பீட்டுச் சந்தா எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். சாரணர், குருளைச் சாரணர், திரி சாரணர் 30 ரூபாவும், சாரண, குருளைச் சாரணத் தலைவர்கள் 60 ரூபா வீதமும் செலுத்துதல் வேண்டும். சாரணர், மதிப்பீடு செலுத்தாத சாரணர், குருளைச் சாரணர் குழுக்கள் பாசறை விழாவில் கலந்துகொள்ள முடியாது.

சாரணர் மதிப்பீடு செலுத்தாத அல்லது சாரணத் தலைவர் பயிற்சி பெற்ற பொறுப்பாசிரியர் இல்லாத சாரண, குருளைச் சாரண குழுக்கள் இயங்குவது எதிர்வரும் 20ஆம் திகதி முதல் முற்றாக தடைசெய்யப்படவுள்ளது.

இதுவரை வேலை வார ரிக்கற் புத்தகங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்தாதவர்கள் உடன் ஓர் புத்தகத்துக்கு 100 ரூபா மேலதிக தண்டப்பணமாகச் சேர்த்து கையளிக்கவும்.

சகல சாரணத் தலைவர்களுக்குமான விசேட கூட்டம் வரும் செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு சீரணிச் சந்தியில் உள்ள யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா.வி. இல் நடைபெறும். சகல சாரணத் தலைவர்களும் (சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணத்தலைவர்கள், மாவட்டச் சாரணத் தலைவர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள் உட்பட) தவறாது கலந்து கொள்ளவேண்டும் என மாவட்ட சாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார். (103)



இளைஞர் யுவதிகளின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்த விஷன்ஸ் அங்கத்தவர்கள் திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்கு தலைமைத்துவ கருத்தரங்கு நடாத்த முன்னர் சைவ சிறுவர் இல்லப்பிள்ளைகளுடன் காணப்படுகின்றனர். (101)

# மனித உரிமைக்கான சுயாதீன நிலையத் திறப்பு விழா இன்று

கடந்தகால யுத்தத்தில் இராணுவத்தினரால் கைதாகி காணாமல் போன இளைஞர், யுவதிகளின் வழக்கு தொடர்பாடல்களுக்கும், பொது மக்களின் சுதந்திர தன்மைக்காகவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய யாழ். மாவட்டத்துக்கான "மனித உரிமைக்கான சுயாதீன முறைப்பாட்டு நிலையம்" இன்று பிற்பகல் 1 மணியளவில் இல. 140, இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் உத்தியோக பூர்வமாக திறக்கப்படவுள்ளது.

அதேபோன்று நாளை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள, படையினரால் கைதாகி காணாமல் போன இளைஞர், யுவதிகளின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சம்பந்தமான பொது கூட்டமும் நடைபெறவுள்ளது.

இதற்கு இந்த அமைப்பின் இலங்கை தலைமையகத்தின் வதிவிட பிரதிநிதிகளான சாந்த டி பத்திரன சாக்கிய நாணயக்கார, சுரெந்திர டி புலத்சிங்கள ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளிப்பார்கள்.

அத்தோடு இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்பட்டவர்களைத் தவிர, ஏனையோரின் வழக்குச் சம்பந்தமான இலவச சட்ட உதவி சம்பந்தமாக விளக்கம் அளிப்பதோடு, யாழ். மாவட்டத்தின் மனித உரிமைக்கான சுயாதீன முறைப்பாட்டு நிலையம் சம்பந்தமான விளக்கமும் அளிக்கப்படும்.

ஆகையால், இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள், சமூக ஆய்வலர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், புத்திஜீவிகள் அனைவரையும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### காங்கிரஸின் செயற்குழு கூட்டம்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு, தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் சகல செயற்குழு உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. சமகால அரசியல் நிலைவரமும், கட்சி முன்னெடுக்கவேண்டிய வேலைத்திட்டங்களும் பற்றிய விடயங்கள் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (31)

### தம்பாட்டி நுணிபுரக் குளம் புனரமைப்பு

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தம்பாட்டி கிராமத்தில் நுணிபுரக்குளம் உலக உலர் உணவு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கிராமமானது கடற்கரையை அண்டி காணப்படுவதால் தரைக்கீழ் நீர் மிகவும் உவர்த்தன்மையாகவுள்ளது. இந்தக் குளத்தை புனரமைத்து மழைநீரைச் சேமிப்பதன் மூலம் இந்தக் குளத்து நீரினால் கிராம மக்கள் பெரிதும் பயனடைவர் என நம்பப்படுகிறது. (51)

### மீட்பு நிதி சான்றிதழை தவறவிட்டோர்களுக்கு

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு பெயர் விபரப் பட்டியலில், பெயர் வெளியானவர்களில் மீட்பு நிதிச் சான்றிதழை தவறவிட்டவர்களுக்கான சந்திப்பு நாளை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை-

வைமன் வீதியிலுள்ள அரசியற் துறை செயலகத்திலும் நாளை மறுதினம் காலை 11.30 மணி தொடக்கம் 1 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் நடைபெறும்.

## பெண்களுக்கான திறனாய்வு பயிற்சி நெறி

பெண்கள் சிறுதொழில் முயற்சிக்கான செயற்திட்ட திறனாய்வு பயிற்சி நெறி நேற்றுமுன்தினம் தொடக்கம் இருநாட்கள் நடைபெற்றது.

யு.என்.டி.பி. நிறுவன நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த பயிற்சி கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னெறி முகாமைத்துவ கணக்கெடுப்புக்கள், முகாமையினை நிர்மாணம் செய்தல், நவீன அணுகுமுறைகள், கால்நடை வளர்ப்பு, புதிய தந்திரோபாயங்கள், தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு கருத்துக்களை கொண்ட வகுப்புக்கள் இடம்பெற்றன.

## ஹைஏஸ்-சைக்கிள் விபத்தில் மீனவர் காயம்

(புதுக்குடியிருப்பு)

கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பு-மந்துவில் பகுதியில் இடம்பெற்ற ஹைஏஸ் - சைக்கிள் வீதி விபத்தில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இதுதொடர்பான விசாரணைகளை தமிழீழ காவற்துறையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## வருடாந்த மஹோற்சவம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சிவிக்சென்ரர் பன்னங்கண்டி பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இந்த விழா தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். 16 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 18 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

தினமும் பகல் 12 மணிக்கும் இரவு 6 மணிக்கும் பூசையும், சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். (9)

## அன்பளிப்பு

கிளிநொச்சி காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தும் நிலையத்துக்கு சூரிய மின்கலம் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த அன்பளிப்பானது யு.என்.டி.பி.யினால் 5 லட்சத்து முப்பத்து ஐயாயிரம் ரூபா பெறுமதியுடைதாகும். இது பொருண்மிய மதியுரையத்தினூடாக அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

## பெய்து வரும் மழையினால் இடையூறு

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் உள்ள விவசாயிகள், வயல்களில் அறுவடை செய்து வரும் இந்த வேளையில் மழை பெய்து இடையூறு விளைவிக்கிறது.

இதனால் அறுவடை செய்த நெற்பயிர்கள் மழையில் நனைகின்றது. இவ்வளவு காலமும் கஷ்ரப்பட்டு பயிர்செய்து, பலன் கிடைக்கின்ற இந்த நேரத்தில் மழை இடையூறாக இருக்கின்றதே என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (9)

# புலிகளின் குரல் வானொலி மன்றத்தின் சிறப்பு முத்தமிழ் கலையரங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி மன்றத்தினால் நடாத்தப்படும் கேணல் கிட்டு, லெப்.கேணல் திலீபனின் நினைவாக சிறப்பு முத்தமிழ் கலையரங்க நிகழ்வு நல்லூர் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

இன்று தொடக்கம் இந்த மாதம் 15 ஆம் திகதிவரை இச்சிறப்பு முத்தமிழ் கலையரங்கம் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வானது தினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வுகளாக சிவசத்திய மோகனின் இசைக்கச்சேரி, பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் சங்கநாதம் எழுச்சி நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

நாளை இரண்டாம் நாள் நிகழ்வாக றொபேட்டின் இசைக்கச்சேரியும், தாயகப் பாடகர்களான சாந்தன், சுகுமார் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், மூன்றாம் நாள் நிகழ்வாக பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் சங்கநாதம் எழுச்சி நிகழ்வும், தாயகப் பாடகர்களான நிரோஜன், திருமாறன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், நான்காம் நாள் நிகழ்வாக மணிமேகலை கிருபாகரனின் பாடல் கச்சேரியும், ராகம்ஸ் இசைக்குழுவினரின் இசை நிகழ்வும், இறுதி நாள் நிகழ்வாக புலிகளின் குரல் நிகழ்ச்சி தயாரிப்பாளரும், அறிவிப்பாளருமான கவிஞர் பொன்.காந்தன் தலைமையில் கவிஞர்கள் பங்குகொள்ளும் கவியரங்கம், மகளிர் கலை பண்பாட்டு கழக போராளி இசைக்கலைஞர்களின் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

மேலும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகளும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளைச் சிறப்பிக்க அனைத்து நேயர்களையும், ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு புலிகளின்குரல் வானொலி மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தின் திறன்விருத்தி போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினரால் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டு திருக்குறள், தமிழ் இலக்கியத்திறன் எழுத்துத் தேர்வு மற்றும் கலைத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் பாடசாலைகளின் விபரங்கள் பின்வருமாறு -

### இலக்கியத்திறன் போட்டி

**பிரிவு அ**

முதலாமிடம் ச.இந்திரதாசன் கிளிநொச்சி இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் ப.சசிதரன் கிளிநொச்சி இந்துக்கல்லூரி, மூன்றாமிடம் மதிவதனி கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

**பிரிவு ஆ**

முதலாமிடம் தி.துளசிகரன் கிளிநொச்சி மத்திய கல்லூரி, இரண்டாமிடம் ஜெ.ஜெஷாந்தி திருவையாறு உயர்நிலைப் பள்ளி, மூன்றாமிடம் சி.வினோபா கண்டாவளை உயர் நிலைப் பள்ளி.

**பிரிவு இ**

முதலாமிடம் ஆ.அனுஷாந் கிளிநொச்சி உயர்நிலைப் பள்ளி, இரண்டாமிடம் ஞா.கீர்த்திகா கனகபுரம் உயர்நிலைப் பள்ளி, மூன்றாமிடம் இ.அனித்தா திருவையாறு உயர்நிலைப் பள்ளி, சி.சுபாங்கி மத்திய கல்லூரி.

**ஊக்கப் பரிசு**

செ.இறைவீயன் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை, ச.அர்ச்சனா இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, ஜெ.யசோதினி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, த.யானுஜா இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, தி.இறுனி கிளிநொச்சி இந்துக் கல்லூரி, அ.ரேனுகா பளை மத்திய கல்லூரி, அ.மெற்றலினா கனகபுரம் உயர்நிலைப் பள்ளி.

**பிரிவு ஈ**

முதலாமிடம் ஐ.ஹரிராம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம் த.நிவேதா இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் பு.தர்சன இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை.

**ஊக்கப்பரிசு**

நா.சுடர்வண்ணன் திருவையாறு உயர் நிலைப் பள்ளி, அ.சௌமியா இந்து தொடக்கப்பள்ளி, யே.இமெல்டா இந்து தொடக்கப் பள்ளி, செந்துயன், இந்து தொடக்கப்பள்ளி, சி.கோதா வட்டக்கச்சி உயர்நிலைப் பள்ளி, இ.யனாத் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, பா.ஆட்சயன் பரந்தன் இந்து உயர்நிலைப் பள்ளி.

### கலைத்திறன் போட்டி

நாவன்மை முதலாமிடம் ஆ.சர்மிளா கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் ஐ.ஹரிராம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் கு.கீர்த்தனன் கனகபுரம் உயர்நிலைப் பள்ளி.

**பிரிவு அ**

முதலாமிடம் மு.கோகிலராணி கறுக்காய்த்தீவு பாடசாலை

**பிரிவு ஆ**

முதலாமிடம் செ.தாரணி இராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் த.துளசிகன் மத்திய கல்லூரி, மூன்றாமிடம் தி.ஸ்ரீரஜீவன் இந்துக்கல்லூரி

**பிரிவு இ**

முதலாமிடம் ஜெ.ஜெயமாருதி இராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் சி.கீர்த்திகா இராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் க.சங்கீதா முருகானந்தா உயர்நிலை மகாவித்தியாலயம், ச.வேணிலன் இந்துக்கல்லூரி

**குறளிசை**

முதலாமிடம் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

**சங்கப்பாடல்**

முதலாமிடம் இராமநாதபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் தர்மபுரம் மகாவித்தியாலயம்.

**நடனம்**

முதலாமிடம் முருகானந்தா மகாவித்தியாலயம்.

**காவடி**

முதலாமிடம் கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயம்

**வினாடிவினா**

முதலாமிடம் கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயம் (9)

## வீரவணக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைக் கடற்பரப்பில் கடந்த புதன் கிழமை பயிற்சியின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் சுதர்சனா (துரைசிங்கம் சதாநந்தினி - நவாலி வடக்கு மானிப்பாய், யாழ்ப்பாணம்) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வீதி விபத்துக்கள்

(இயக்கச்சி)

புதுக்காட்டுச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இதேவேளை, இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற பயணிகள் பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இதேவேளை ஆனையிறவு பகுதியில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் ஒருவர் காயமடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக தமிழீழ காவற்துறையினரால் வீதி ஒழுங்குக் கருத்தரங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் வீதி விபத்துக்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

# காணி உறுதிப்பத்திரம் இல்லாமையால் வீடுகளை புனரமைக்க முடியாத நிலை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் 10 வீட்டுத் திட்டத்தில் 75இற்கு மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரமாக 30 வருடத்துக்கு மேல் வசித்து வருகின்றன.

இவர்களுக்கு சொந்தக் காணிகள் இருந்தும் அதற்கான காணி உறுதிப்பத்திரம் இல்லாமையால், தங்களின் வீடுகளை புனரமைக்க முடியாத நிலையிலுள்ளனர்.

மேற்படி குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக சில நிறுவனங்கள் முன்வந்தபோதிலும் காணி உறுதிப்பத்திரம் இல்லாமையால் உதவிகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு மக்கள் நிலைமையை எடுத்துக் கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமலும், உறுதிப்பத்திரம் வழங்காமலும் இருந்து வருவதால் மக்கள் கவலை அடைந்துள்ளனர். (9)

முல்லைத்தீவு

# முத்தையன்கட்டு பிரதேச மாதாந்த வீரமுரசு நிகழ்வு

முல்லைத்தீவு - முத்தையன்கட்டு பிரதேச மாதாந்த 'வீரமுரசு' நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முத்தையன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரவு 8 மணிக்கு நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

மேற்படி நிகழ்வில் சி.வேதவனம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## விளையாட்டுப் பயற்சி

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் இளைஞர் யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மாதம் 16,17 ஆம் திகதிகளில் தேசிய இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும் என மன்றச்செயலாளர் சிவலோகநாதன் தெரிவித்தார்.


# ஜெய்ப்பூர், யு.என்.எச்.சி.ஆர் இணைந்து

JAFFNA JAIPUR CENTRE
DISABILITY REHABILITATION

## முச்சக்கரவண்டிகள், சக்கரநாற்காலிகள் பழுதுபார்க்கும் வேலைத்திட்டம்

ஜெய்ப்பூர் நிறுவனம் யு.என்.எச்.சி.ஆர் உடன் இணைந்து வலுவிழந்தோரின் பாவனையிலுள்ள பழுதடைந்த முச்சக்கரவண்டிகள், சக்கர நாற்காலிகளை பழுதுபார்த்து வழங்கவுள்ளது. இதன் ஓரங்கமாக பழுதடைந்த வண்டிகளை அந்தந்த பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகங்களில் வைத்து பொறுப்பேற்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட பின் அந்தந்த இடங்களிலேயே வைத்து மீள ஒப்படைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது. பழுதடைந்த வண்டிகளைப் பொறுப்பேற்றும் திகதி, நேரம், பிரதேச செயலர் பிரிவு, இடம் பற்றிய விபரம் வருமாறு.

| திகதி | நேரம் | பிரதேச செயலர் பிரிவகள் | பொறுப்பேற்கும் இடம் |
|---|---|---|---|
| 15.09.04 | காலை 9.00 | காரைநகர் | காரைநகர் பிரதேச செயலகம் |
| | மதியம் 12.30 | சங்கானை, சண்டிலிப்பாய் | சங்கானை பிரதேச செயலகம் |
| | மாலை 3.00 | உடுவில், தெல்லிப்பளை | உடுவில் பிரதேச செயலகம் |
| 27.09.04 | காலை 9.00 | மருதங்கேணி | மருதங்கேணி பிரதேச செயலகம் |
| | மாலை 2.00 | சாவகச்சேரி | சாவகச்சேரி பிரதேச செயலகம் |
| 07.10.04 | காலை 9.00 | பருத்தித்துறை | பருத்தித்துறை பிரதேச செயலகம் |
| | மதியம் 1.00 | கரவெட்டி | கரவெட்டி பிரதேச செயலகம் |
| 14.10.04 | காலை 8.30 | கோப்பாய் | கோப்பாய் பிரதேச செயலகம் |
| | மதியம் 12.00 | நல்லூர் | நல்லூர் பிரதேச செயலகம் |
| | மாலை 2.00 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் |

*தலைவர்,*
*யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.*
*05, பழைய பூங்கா வீதி,*
*சுண்டுக்குழி.*

(C/3083)

Tele No : 021-2222574
E.Mail : Jaipurj@Sltenet.ik

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அர்த்தமற்ற சந்திப்புக்களும் ; ஆக்கபூர்வமற்ற பேச்சுக்களும்...

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் பேச்சு வார்த்தை முயற்சிகளை முன்னெடுத்தல் குறித்து - கலந்தாலோசனைகளை மேற்கொள்வதற்கென ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய பேச்சுக்களின்போது ஆக்கபூர்வமான முடிவெதுவும் எட்டபபடவில்லை எனத் தெரியவந்துள்ளது.

ஆளும் தரப்பின் தலைவியும், எதிர்தரப்பின் தலைவரும் தேசிய முக்கியத்துவமிக்க ஒரு பிரச்சினை தொடர்பாக சந்தித்துப் பேசுகிறார்களென்றால் அதன் முடிவுகள் நாட்டின் எதிர்கால நன்மை குறித்து புரிந்துணர்வுடனும், பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும் எல்லாவற்றிற்கும் மேலாக தேசிய பொறுப்புடன் எடுக்கப்படுபவையாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்கும் இருப்பது இயற்கையேயாகும்.

இன்று நாட்டின் அதிமுக்கியத்துவமிக்க பிரச்சினையாக இருக்கும் சமாதானப் பேச்சுத் தொடர்பான விடயமானது அரசுக்கு மிகவும் நெருக்கடியைத் தரும் ஒன்றாக நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றதை - தேசமும் சர்வதேசமும் கவலையுடன் அவதானித்து வருகின்ற சூழலில் இந்த இருவரும் சந்தித்துப் பேசிய போதிலும், மக்களது எதிர்பார்ப்புக்கேற்ற நம்பிக்கை தரும் தீர்மானமெதனையும் இருதரப்பும் எடுக்காதுபோனது துரதிஷ்ட வசமானதேயாகும். இவர்கள் இருவரது சந்திப்பின் முடிவு இப்படியான தொன்றாகத்தான் இருக்கும் என்பதனை இலங்கையின் அரசியலறிந்தோர் அறிவர்.

எந்தக் காலத்திலும் இனப்பிரச்சினை குறித்தோ, சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக் குறித்தோ இலங்கையின் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருமித்து முடிவெடுத்ததாக வரலாறே கிடையாது.

ஆளும்கட்சி ஒரு தீர்மானம் எடுத்தால் எதிர்க்கட்சி அதனை எதிர்ப்பதிலேயே கண்ணாயிருக்கும்.

அதே எதிர்க்கட்சி ஆளும் கட்சியாகி ஒரு முடிவை மேற்கொள்ள நினைத்தால் முன்னைய ஆளும் கட்சி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்துகொண்டு அதை மூர்க்கத்தனமாக எதிர்க்கும்.

கடந்த நான்கு தசாப்த காலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்த அனைத்துச் சந்தர்பங்களும் கைநழுவிப் போனமைக்கு இந்த முரண்கருத்து நிலைப்பாடே காரணமாகும்.

இந்த ஆளும் - எதிக்கட்சிகளுக்கிடையிலான அரசியல முரண் நிலையானது ஒரு நிரந்தர அரசியல் பகைமை நிலையை இங்கு உருவாக்கிவிட்டுள்ளமையாலேயே நாடு அமைதியை, வளர்ச்சியை சமாதான சகவாழ்வு நிலையை முற்றாகவே இழந்து பேரவலங்களைத் தொடர்ந்தும் சந்திக்கும் நாடாகியுள்ளது.

இந்தநிலை தற்போதைக்கு மாறும் என எவராலும் எதிர்ப்பார்க்க இயலாநிலையேயுள்ளது.

தேசியக் கட்சிகளுக்கிடையேயான அரசியல் கொந்தளிப்பு முறுகல் நிலையானது தேசத்தின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு இப்போது நிரந்தர அச்சுறுத்தலாகி விட்டுள்ளதுடன், தேசிய இனங்களுக்கிடையேயான மொழி, மற்றும் மதரீதியிலான வேறுபாட்டு உணர்வை அவர்கள் வளர்த்து விட்டமையானது ,நாட்டை சகல வழிகளிலும் பாரிய பின்னடைவை நோக்கி தள்ளிவிட்டுள்ளது.

இத்தகைய மோசமானதும், குழப்பமானதும், நெருக்கடி மிக்கதும், சமாதான சூழலுக்கு அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதுமான நிலையிலேயே - ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதும் அவர்களால் நாட்டை இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்ற பொறுப்புணர்வுடன் ஓர் தீர்மானத்திற்கு வரமுடியவில்லை என்றால், இனவிவகாரம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அரசு பேசும் நிலை ஏற்படினும் ஒரு சுமுகமானதும், முரண்பாடுகளற்றதுமான தன்மையுடன் பேச்சுத் தொடர்ந்து ஒரு நியாயமான தீர்வு நிலைவரை அது தொடரும் என எவராலும் நம்பமுடியுமா?

தங்களுக்குள்ளேயே முரண்நிலையுடன் முறுகிக் கொண்டிருக்கும் தென்னிலங்கைத் தலைமைகள் அரசியல் அதிகாரத்தைத் தம்வயப்படுத்தி தக்கவைத்துக்கொள்ளும் வெறியுடனும், மேலாதிக்க மனோபாவத்துடனும் இயங்கும் நிலையிலிருந்து தேசியப் பொறுப்புடனும், இன ஐக்கியத்தைப் பேணும் அக்கறையுடனும் செயற்படும் நிலைக்கு இறங்குவார்கள் என்ற நம்பிக்கை முழுவதும் அற்றுபோய் விட்டதென்றே கூறவேண்டும்.

இந்தச் சூழலில் சமாதனத்தை வலியுறுத்தும் அமெரிக்காவும், ஏனைய சர்வதேச சக்திகளும் அதனை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பினைக்கொண்ட அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காது - நியாயமான முறையிலான பேச்சுவார்த்தைகளுக்கு எப்போதுமே தயாரென வெளிப்படையாகக் கூறிநிற்கும் விடுதலைப் புலிகள்மீது அழுத்தம் தெரிவிக்க முற்படுவதும்,அரசுடன் இணங்கிப்போவதுமான அறிவுறுத்துவதும் அர்த்தமற்றதும் நியாயமற்றதுமாகும்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டுமானால், முதலில் பேரினவாத கட்சிகள் அமைப்புக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒடுக்கவேண்டு ம. ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் தேசிய கொள்கையொன்றினை இனப்பிரச்சினை தொடர்பாக ஒன்றிணைந்து உருவாக்கவேண்டும். விடுதலைப் புலிகளைத் தமிழரின் ஏகப்பிரதிநிதிகளாக ஒப்புக்கொண்டு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடயத்திலிருந்து பேச்சுவார்ததைகளை தொடரமுன்வரவேண்டும்.

இவைகளுக்கு அரசதரப்பு தயாராக இருக்கும் - முன்வரும் என்பது இப்போதைக்குச் சாத்தியமற்ற விடயமேயாகும்.

எனவே, சமாதான முயற்சிகளை இப்போதைக்கு ஆக்கபூர்வமாக அரசு முன்னெடுக்கும் சாத்தியமும் இல்லை என்பதே உண்மையாகும்.

## நாடும் நடப்பும்




# தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் இந்தியா தடைசெய்யவேண்டும்!

## மத்திய அரசிடம் சுப்பிரமணியசுவாமி கோரிக்கை



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு-தமிழீழ விடுதலைப் புலிகளைப் போலவே செயற்பட்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போலவே செயற்படுகின்றனர். எனவே இந்தியாவில் புலிகள் இயக்கத்தை தடை செய்தது போல, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரையும் தடை செய்ய வேண்டுமென ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியசுவாமி இந்திய மத்திய அரசிடம் கோரியுள்ளார்.

'ஏசியன் ரிபியுன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் மேலும் கருத்துக் கூறிய அவர்- இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவில் அமைந்துள்ளதைப் போன்ற சமஷ்டி முறையே உரிய தீர்வை ஏற்படுத்தும், இலங்கை அரசாங்கம் இது தொடர்பாக விரைவில் அறிவித்தல் ஒன்றை விடுக்கவேண்டும்.

புதிய அரசியலமைப்பு ஒன்றின் கீழ் இலங்கையின் நாடாளுமன்றம் இந்தியாவில் உள்ளதைப் போன்று, சமஷ்டி முறை ஒன்றுக்கு வழிவகுத்து, அரசியலமைப்பு சபையாக மாற்றப்பட்டு, அதன் கீழ் தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதேசத்துக்கும், சிங்களவர்கள் அதிகமாக வாழும் பிரதேசத்துக்கும் தனித்தனியே சட்டசபைகள் அமைக்கப்படவேண்டும்.

இந்திய அரசியலமைப்பின் 356 ஆவது சரத்தைப் போல குறிப்பிட்ட சட்டசபைகள் பிரிவினைக்கு முற்படுமானால், அதனைக் கலைத்து மத்திய அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் சுப்பிரமணியசுவாமி ஆலோசனை கூறியுள்ளார்.

இலங்கை வேண்டுகோள் விடுக்குமாக இருந்தால், இந்தியா தமது இராணுவத்தின் ஒரு பிரிவையும், விமானப்படையின் ஒரு பிரிவையும் கொழும்பில் நிலை கொள்ளச் செய்யலாம் எனவும் தெரிவித்த சுப்பிரமணியசுவாமி.

இந்த விடயத்தில் ஏற்கனவே இலங்கைக்கு இந்திய அமைதிப் படையாகச் சென்றிருந்த போது கிடைத்த அனுபவம் இந்திய இராணுவத்தினருக்கு இருப்பதாகக் கூறியதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும் இந்திய அமைதிப்படையினரை அவமதித்ததாகவும் தெரிவித்தார். (01)

# பட்டதாரிகள் பயிற்சி நெறிக்கு சமூகமளிக்க எதிர்வரும் திங்கட்கிழமை இறுதி நாளாகும்

## - யாழ்.மாவட்ட செயலக இணைப்பாளர் அறிவிப்பு

இதுவரை பயிற்சிக்குச் சமூகமளிக்காத பட்டதாரிகளை திங்கட்கிழமை முதல் பயிற்சிக்குச் சமூகமளிக்குமாறு, பட்டதாரிகள் பயிற்சிநெறிக்கான யாழ்.மாவட்ட செயலக இணைப்பாளர் கெ.கனகரட்ணம் கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது - யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுவரும். பட்டதாரிகள், பயிற்சி நெறியில் முதல் கட்டப் பயிற்சி நெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட 538 பேரில் 476 பேர் மாத்திரமே பயிற்சி நிலையங்களுக்குச் சமூகமளித்துப் பயிற்சிபெற்று வருகின்றனர்.

பயிற்சிக்கு இதுவரை சமூகமளிக்காதவர்களுக்கு திங்கட் கிழமையே இறுதிநாளாக இருப்பதால், அன்றைய தினம் அவர்கள் பயிற்சிக்குச் சமூகமளித்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இல்லையேல் அவர்கள் இந்தப் பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்பதே நிதிஅமைச்சின் பணிப்பு. அதனை நிறைவேற்றவேண்டியது எமது கடமை. தற்போது பயிற்சி பெற்றுக்கொண்டிருப்போர்கூடத் தகுந்த காரணங்கள் இன்றிப் பயிற்சிக்குச் சமூகமளிக்காமல் விட்டால் அவர்களும் பயிற்சியிலிருந்து இடைநிறுத்தப்படுவர்.

'எனினும் பெண் பயிற்சியாளர்களுக்கு மட்டும் பிரசவ விடுமுறை வழங்கும் ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.'

அடுத்த கட்டப் பயிற்சிகள் குறித்துத் தற்போது எதுவும் கூறமுடியாது. அரசின் அறிவிப்பின்பேரிலேயே அதனை நாம் தொடங்கமுடியும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ப)

## சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுயதொழில் அபிவிருத்தி நடவடிக்கை

யாழ்.குடாநட்டின் அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கு அமெரிக்க உதவும் நிறுவனத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுயதொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளன. யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்களின் பொருளாதார அபிவிருத்திகளை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டே இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான துறைசார் பயிற்சிகள், தொழில் முயற்சிக் கடன்கள், ஊக்குவிப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், சந்தை வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவையும் நடைமுறைப்படுத்தவுள்ளன. (17)

## வரவுசெலவுத் திட்டம் குறித்து ஆராயும் திணைக்களத தலைவர்களுக்கான கூட்டம்

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கென ஒதுக்கப்படவுள்ள, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம் குறித்து ஆராயும் திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இருநாட்களும் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கலைந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ்ப்பாணச் செயலக அதிகாரிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது எந்தெந்தத் துறைகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்குவதெனவும், அத்தியாவசிய சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவது குறித்தும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடமாடும் வங்கிச் சேவை

தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக் கிளையின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி, நடமாடும் வங்கிச் சேவை ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தக் கிளையின் முகாமையாளர் மாணிக்கம் பரமானந்தம் தலைமையில் கிளை உத்தியோகத்தர்கள் நடாத்தவுள்ளனர்.

இநத நடமாடும் வங்கிச் சேவையானது இதுவரை காலமும் வங்கிச் சேவையை முழுமையாகப் பெற்றுக்கொள்ளாத வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களான மருதஙகேணி, தாளையடி, செம்பியன்பற்று, ஆழியவளை போன்ற பிரதேச மக்களின் நன்மை கருதியும், சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டும் நடாத்தப்படுகின்றது. பின்வரும் இடங்களில் நடமாடும் வங்கிச் சேவை நடைபெறுகிறது.

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, மருதங்கேணி இ.த.க. பாடசாலை, ஆழியவளை மகாவித்தியாலயம்.

இந்த வங்கிச் சேவையானது காலை 8 மணிதொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை நடைபெறவுள்ளது. (122)

செய்திக் கட்டுரை... - கனகரவி

# பெண்கள் சங்கம நிகழ்வும், அது குறித்த சில கருத்துக்களும்...

கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் பத்தாமாண்டு நினைவை முன்னிட்டு வவுனியா மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் - 16.08.2004 அன்று பெண்கள் சங்கம நிகழ்வொன்றை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் மிகவும் சிறப்பாக நடத்தி



யது.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - கருத்துரைகள், கருத்துப் பகிர்வுகள், குழுநிலை விவாதங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

இந்த நிகழ்வுபற்றி இதில்கலந்துகொண்ட பலரிடம கருத்துக் கேட்டபோது அவர்கள் கூறியவற்றை முழுமையாக நோக்குவோம்.

**பத்மினி சிதம்பரநாதன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*

பெண்கள் சங்கம நிகழ்வுகளை முன்பும் நடத்தியுள்ளோம். அதன்போது பெண்களின் நிலை பற்றி ஆராய்ந்தோம். இதில் சமூகத்தில் பெண்களுக்குள்ள பிரச்சினைகள் பற்றி குழுக் கலந்துரையாடல்களை நடத்தியிருக்கிறோம். இன்றைய சங்கம நிகழ்வை அடுத்த வளர்ச்சிக் கட்டமாகவே நாம் பார்க்கின்றோம். தமக்கிருந்த தடைகளுக்குள்ளிருந்து வெளியே வந்த பெண்களுக்கு ஆளுமையை விருத்தி செய்யக் கூடிய களமாக இது அமையுமென நான் நினைக்கின்றேன். பொருளாதார வளர்ச்சிக்கான வழிமுறைகள் பற்றியும் இதில் ஆராய்கின்றோம்.

இந்த நிகழ்வுகளால் மட்டும் பெண்கள் மத்தியில் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது. பலர் ஒன்று கூடும் போது புத்துணர்வு வரும். அது பயனுள்ளதாக அமையுமெனக் கூறலாம்.



**ரதி**
*ஆசிரியர் - வவுனியா*

தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தார்கள். இப்படியான நிகழ்வுகளுக்கூடாக வெளிவருகின்றனர். மற்றவர்களுக்கு உயிர் கொடுப்பவர்களாக இவர்கள் இருப்பார்கள் எனச் சொல்வதுகூடத் தவறானதாக இருக்காது.

சமூக முடக்கத்தை நிச்சயம் எழுச்சிப் படுத்தவேண்டும். ஒரு நாளில் முழுமையான எழுச்சியைக் கொண்டுவர முடியாது. ஒரு மாற்றத்தை உண்டாக்கக்கூடிய படியாக நோக்கலாம். கிராமரீதியாக சமூகத் தொண்டர்களை உருவாக்கவேண்டும். அதன் மூலமாக இன்னும சமூக அக்கறையுடன் பணியாற்றலாம்.

இன்று பெண் விடுதலை தொடர்பான கருத்துள்ளது. இதனை இன்னும் வளர்க்க வேண்டும்.

**பத்மா ஜெயச்சந்திரன்**
*வவுனியா*

பெண்கள் ஒன்று சேர்வதென்பது சமூகம் ஒன்று சேர்வதற்கான சந்தர்ப்பம். சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெண்களின் ஒன்றுசேரல் அவசியமாகும். பெண்கள் ஒவ்வொருவரும் மன இருளில் இருந்து வெளிவரும்போது பெண்களுக்கான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம். பெண்கள் பல பிரச்சினைகளுக்கு உள்ளாவதற்குக் காரணம் - சமூகம் பற்றி அவள் வைத்திருக்கும் கருத்து நிலைதான்.



மனம் உறுதியாக இருக்கின்றபோது எந்த இறுக்கமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் கருத்துக்களையும் உடைத்தெறியலாம்.

**மேரி அன்ரன் நிக்ளஸ்**
*பூவரசங்குளம் - வவுனியா*

இன்றைய சங்கமம் நல்ல கருத்துக்களைப் பெறக்கூடியதாக இருந்துள்ளது. பெண்களின் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பு என்பதை பெண்கள் உணருகின்றபோது, அவர்களால் ஆளுமையுள்ளவர்கள் என நிரூபிக்கமுடிந்துவிடுகின்றது. ஆகவே, வேறு எவரிலும் பெண்கள் குறைகண்டுகொண்டிருக்காமல் தமது சொந்தக் காலில் உறுதியுடன் நிற்கத் தன்னை உணரவேண்டும்.

**ஏ.ரஜவியா**
*செட்டிக்குளம் - வவுனியா*

பெண்கள் சங்கம நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் கலந்துகொள்வது சிரமமானதாக இருந்தது. இராணுவமும், பொலிஸும் - நீங்கள் முஸ்லிம் பெண்கள் இப்படியான நிகழ்வுகளுக்குப் போகவேண்டாம் எனக் கூறுவது எமக்குப் பெரும் இடையூறுதானேஎன்றாலும் அரசியற்துறைப் பொறுப்பாளர் எமது கிராமத்துக்கு வந்துபோவார். அவர் எம்முடன் பேசுவதைக்கூட பொலிஸார் விசாரித்துத் தடுக்கவே முயல்கின்றனர். தடைகள் பலதைத் தாண்டித்தான் இந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றோம்.

**கோகுலராணி புஸ்பகரன்**
*வவுனியா*

எனக்குத் தடைகள் இல்லை. ஆனால், கிராமப் பெண்களை ஒன்று திரட்டிக்கொண்டு வருவதற்குச் சில தடைகள் உள்ளன. வவுனியாவில் 108 மாதர் சங்கங்கள் உள்ளன.

இவற்றில் உள்ளவர்கள் முழுமையாகப் பணியாற்றுகின்றபோது முழுமையான மாற்றமொன்றை உருவாக்கலாம்.

**அலை**
*மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர், வவுனியா மாவட்டம்*

கடந்த ஆண்டு நாம் செய்த நிகழ்வு பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் நடைபெற்றது. இந்த ஆண்டு பெரும்மாற்றம் ஏற்பட்டுள்ளது. பல பெண்கள் எமது தேசத்தின் ஒட்டுமொத்த நிம்மதிக்காகப் பணிபுரிய நம்பிக்கையைத் தந்துள்ளார்கள். பெண்களுக்கான சில பிரச்சினைகளைத் தீர்க்கச் சட்ட மூலம் என்ற தடை இருக்கிறது. இவற்றுக்குக் கருத்து ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம்.

பல கருத்துரைகள் பெண்களின் தனித்த செயற்பாட்டுக்கான ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. எமது தேசத்தில் பெண் விடுதலை என்பது தேச விடுதலையுடன் இணைந்ததெனினும் இதுபோன்ற சமூக அக்கறையுடனான நிகழ்வுகளும் அவசியமானதாகும். ☆

---

# உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுத்தது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான
# அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998 - 05 - 19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997-02-17ஆம் திகதி 963/1 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீதுபாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

⌘ இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
⌘ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ, அத்தொகையாகும்.
⌘ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02)18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
⌘ சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
⌘ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
⌘ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்:

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | மு.பகல் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | அந்தணத்திடல் | திரு. வீ. இரத்தினகாந்தன் | 25. 09. 2004 | 10மணி | கப்புதூ ஏகாம்பரம் வித்தியாலயம் |
| 02. | 02 | இமையாணன் | திருமதி எஸ். அழகேந்திரராஜா | " | " | கிளைக் கட்டிட முன்றல் |
| 03. | 03 | இமையாணன் கிழக்கு | திருமதி பா. கலைச்செல்வி | " | " | இமையாணன் அறிவாலயம் ச. ச. நிலையம் |
| 04. | 04 | இமையாணன் வடமேற்கு | செல்வி கே. ஜெயசுதா | " | " | வீரகத்தி விநாயகர் சனசமூக நிலையம் |
| 05. | 05 | கலட்டி | திரு. ரி. என். ராஜா | " | " | கிளைக் கட்டிட முன்றல் |
| 06. | 06 | கம்பர்மலை | திரு. வை. கைலைநாதன் | " | " | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் |
| 07. | 06A | கம்பர்மலை கிழக்கு | திரு. பி. மோகன் | " | " | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் |
| 08. | 07 | தூதாவளை | திரு. எஸ். திருச்செல்வம் | " | " | கரணவாய் மூத்தவிநாயகர் ச. ச. நிலையம் |
| 09. | 08 | கப்புதூ | திரு. ஐ. நாகேஸ்வரன் | " | " | கப்புதூ ஏகாம்பரம் வித்தியாலயம் |
| 10. | 09 | கரணவாய் மத்தி | திரு. ரி. கணபதிப்பிள்ளை | " | " | கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் |
| 11. | 10 | கொற்றையூர் | வி. யோகேஸ்வரி | " | " | கம்பன் சனசமூக நிலையம் |
| 12. | 11 | கரணவாய் தெற்கு | திரு. ரி. செல்வச்சோதி | " | " | கரணவாய் மணியகாரன் தோட்டம் பாடசாலை |
| 13. | 12 | சமரபாகு | திரு. கே. திலகேந்திரன் | " | " | நியூட்டன் சனசமூகநிலையம் |
| 14. | 12A | கொற்றாவத்தை | திரு. வி. சிவகுமார் | " | " | கொற்றாவத்தை கலைவாணி ச. ச. நிலையம் |
| 15. | 13 | மண்டான் | திரு. கே. நவீதரன் | " | " | மண்டான் மாவலி படிப்பகம் |
| 16. | 14 | முருகமூர்த்தி | திரு. ஆர். விஜயமோகனராஜா | " | " | முருகமூர்த்தி சனசமூக நிலையம் |
| 17. | 15 | நவிண்டில் | திருமதி வி. சுகன்ஜா | " | " | கிளைக் கட்டிட முன்றல் |
| 18. | 16 | பழனிநிதி | செல்வி. ரி. கிருஸ்ணபவானி | " | " | கிளைக் கட்டிட முன்றல் |
| 19. | 17 | கரணவாய் வடக்கு | செல்வி ரி. மாலினி | " | " | கரணவாய் தாமோதர வித்தியாலயம் |
| 20. | 18 | நாவலடி | செல்வி ரி. தவலீலா | " | " | நாவலர் சனசமூக நிலையம் |
| 21. | 19 | சோழங்கன் | திரு. ஆர். புவன்ராஜ் | " | " | கரணவாய் மகா வித்தியாலயம் |
| 22. | 19A | விபுலானந்தர் மக்கள் கடை | திரு. எஸ். குமாரவேலு | " | " | விபுலானந்தா சனசமூக நிலையம் |
| 23. | 20 | சிறீமுருகன் | திரு. கே. குகதாசன் | " | " | சோழங்கன் சனசமூக நிலையம் |
| 24. | 20A | கல்லுவம் | திரு. ஏ. தர்சன் | " | " | கலைநேசன் சனசமூகநிலையம் |
| 25. | 21 | கருணையம்பதி | செல்வி ஆர். ராஜலக்சுமி | " | " | கரணவாய் தாமோதர வித்தியாலயம் |
| 26. | 22 | உடுப்பிட்டி மத்தி | திரு. எம். எஸ். சண்முகநாதன் | " | " | கிளைக் கட்டிட முன்றல் |
| 27. | 23 | வல்வெட்டி | திரு. ஆர். பாலச்சந்திரன் | " | " | வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் |
| 28. | 24 | வல்வெட்டி மேற்கு | திரு. வி. கே. அருந்தவநாதன் | " | " | கிளைக் கட்டிட முன்றல் |
| 29. | 33 | இமையாணன் வடக்கு | திருமதி ஏ. ஜெகநாதன் | " | " | ஜோதி சனசமூக நிலையம் |
| 30. | 34 | கரணவாய் வடமேற்கு | திரு. என் சிவச்சந்திரன் | " | " | கலைமதி சனசமூக நிலையம் |

கூ. அ. உ. ஆணையாளர் பணிமனை,
857, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், 10. 09. 2004

ஒப்பம் : செ. கனகசபாபதி
கூ. அ. உ. ஆணையாளர், யாழ். மாவட்டம்

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

93. யா/தெ/ 3496 திரு. கந்தையா விஜயரத்தினம்
94. யா/தெ/ 3505 செல்வி. கோசலாதேவி மாணிக்கம்
95. யா/தெ/ 3509 திரு. சின்னப்பு குணரத்தினம்
96. யா/தெ/ 3527 திரு. கணபதி கிருஷ்ணர்
97. யா/தெ/ 3653 திரு. கந்தப்பிள்ளை சிவலிங்கம்
98. யா/தெ/ 3672 செல்வி. அமுதினி சின்னத்தம்பி
99. யா/தெ/ 3677 திரு. பொன்னுத்துரை பத்மநாதன்
100. யா/தெ/ 3683 திரு. முருகேசு இராசசிங்கம்
101. யா/தெ/ 3693 திருமதி. அம்மாப்பிள்ளை
வல்லிபுரம்
102. யா/தெ/ 3705 திருமதி. புனிதவதி கந்தையா
103. யா/தெ/ 3828 திருமதி. சத்திஸ்வரி சிவலிங்கம்
104. யா/தெ/ 3978 திரு. முத்தையா சிவசுதன்
105. யா/தெ/ 3986 திருமதி. இரத்தினம் இராசையா
106. யா/தெ/ 4067 திருமதி. கமலாம்பிகை
செல்வரத்தினம்
107. யா/தெ/4148 திருமதி. இராசம்மா சுந்தரமூர்த்தி
108. யா/தெ/4310 திரு. கந்தையா நடராசா
109. யா/தெ/4354 செல்வி. ரஞ்சிதமலர் சீனி
110. யா/தெ/4371 திரு. செந்தில்நாதன் ஐயர்
இரவிச்சந்திரன்
111. யா/தெ/4462 திருமதி. நாகேஸ்வரி அம்மா
தம்பிமுத்து
112. யா/தெ/4502 செல்வி. சிவதேவி சிங்கநாயகம்
113. யா/தெ/4503 திருமதி. பேரின்பநாயகி கதிரமலை
114. யா/தெ/4509 திரு. அகுஸ்தீன் செபமாலை
115. யா/தெ/4510 திரு. வையிரமுத்து பாலசிங்கம்
116. யா/தெ/4525 திருமதி. வரோனிக்கா மாட்டீன்
117. யா/தெ/4552 திரு. நாகர் கிருஷ்ணர்
118. யா/தெ/4578 திருமதி. பொன்மணி கந்தையா
119. யா/தெ/4585 திரு. அருணாசலம் விஸ்வநாதன்
120. யா/தெ/4598 திரு. கந்தவனம் கதிர்காமசிங்கம்
121. யா/தெ/4613 திருமதி. நாகம்மா கந்தையா
122. யா/தெ/4643 திரு. பொன்னு சிவசுப்பிரமணியம்
123. யா/தெ/4651 திரு. தாமோதரம்பிள்ளை
மோகனசுந்தரம்
124. யா/தெ/4673 திருமதி. மனோன்மணி அழகரட்ணம்
125. யா/தெ/4703 திரு. தம்பிமுத்து குகதாஸ்
126. யா/தெ/4730 திரு. முருகேசு நாகரத்தினம்
127. யா/தெ/4756 திரு. இராசா சிவராசா
128. யா/தெ/4758 திரு. முருகேசு சபாபதி
129. யா/தெ/4782 திரு. சடையர் சீனியர்
130. யா/தெ/4804 திரு. வயிரவி நன்னித்தம்பி
131. யா/தெ/4816 திரு. இராசையா பொன்னுத்துரை
132. யா/தெ/4852 திரு. அம்பலப்பிள்ளை செல்லத்துரை
133. யா/தெ/4859 திரு. நல்லதம்பி துரைராசா
134. யா/தெ/4891 திருமதி. ஞானாம்பிகை நாகலிங்கம்
135. யா/தெ/4964 திரு. கதிர்காமு இராசையா
136. யா/தெ/5014 திரு. சின்னத்தம்பி நாகரத்திணம்
137. யா/தெ/5015 திருமதி. சின்னத்தங்கச்சி
சின்னத்துரை
138. யா/தெ/5174 திரு. முருகேசு இராமலிங்கம்
139. யா/தெ/5193 திரு. செல்லப்பா சின்னத்துரை
140. யா/தெ/5194 திருமதி. தனேஸ்வரி கணபதிப்பிள்ளை
141. யா/தெ/5199 திரு. சந்தியா செபஸ்தி
142. யா/தெ/5227 திரு. மகாரத்தினம் கருணாகரன்
143. யா/தெ/5280 திரு. சின்னத்தம்பி கதிரவேலு
144. யா/தெ/5292 திருமதி. கெங்கையம்மா சண்முகம்
145. யா/தெ/5307 திருமதி. செல்வமலர் தர்மபாலன்
146. யா/தெ/5340 திரு. வேலுப்பிள்ளை தம்பையா
147. யா/தெ/5355 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
148. யா/தெ/5356 திருமதி. மகேஸ்வரி கந்தையா
149. யா/தெ/5451 திரு. சின்னத்துரை செல்வநாயகம்
150. யா/தெ/5481 திரு. கார்த்திகேசு கந்தையா
151. யா/தெ/5485 திருமதி. மனோன்மணி வன்னியசிங்கம்
152. யா/தெ/5494 திரு. மாணிக்கம் சின்னத்துரை
153. யா/தெ/5538 திருமதி. நகுலாம்பிகை முத்துலிங்கம்
154. யா/தெ/5594 திருமதி. இலட்சுமி நாகலிங்கம்
155. யா/தெ/5598 தருமதி. மதியாபரணம் சுப்பிரமணியம்
156. யா/தெ/5610 திரு. நன்னிக்குட்டி சுந்தரமூர்த்தி
157. யா/தெ/5645 திருமதி. தையல்நாயகி சீவரெட்ணம்
158. யா/தெ/5648 திரு. கதிரேசு சுப்பிரமணியம்
159. யா/தெ/5653 திரு. வேலுப்பிள்ளை வல்லிபுரம்
160. யா/தெ/5660 திருமதி. மரியப்பிள்ளை தம்பியப்பு
161. யா/தெ/5676 திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு
162. யா/தெ/5705 திரு. கந்தப்பிள்ளை அப்பாப்பிள்ளை
163. யா/தெ/5747 திருமதி. செல்வநாயகி சோமசுந்தரம்
164. யா/தெ/5749 திருமதி. மாணிக்கப்பிள்ளை
கந்தரத்தினம்
165. யா/தெ/5789 திரு. கந்தர் சரவண்முத்து கந்தவனம்
166. யா/தெ/5795 திருமதி. அன்னம்மா முருகையா
167. யா/தெ/5803 திரு. தம்பையா யோகராசா
168. யா/தெ/5808 திருமதி. மரியம்மா சின்னப்பு
169. யா/தெ/5883 திருமதி. ஆச்சிப்பிள்ளை கனகசிங்கம்
170. யா/தெ/5912 திரு. ஆறுமுகம் இளையதம்பி
171. யா/தெ/5924 திருமதி. கௌரி நாராயணசாமி
172. யா/தெ/5954 திரு. கந்தையா கனகசுந்தரம்
173. யா/தெ/6032 திருமதி. சரஸ்வதி முருகையா
174. யா/தெ/6035 திரு. அப்பாப்பிள்ளை
கணபதிப்பிள்ளை
175. யா/தெ/6045 திரு. சின்னத்துரை இரத்தினம்
176. யா/தெ/6111 திரு. மூத்ததம்பி சவுந்தரநாயகம்
177. யா/தெ/6134 திரு. வைத்திலிங்கம் இளையதம்பி
178. யா/தெ/6191 திரு. சின்னையா பொன்னம்பலம்
179. யா/தெ/6209 திருமதி. சரோஜினிதேவி
பிள்ளையாகுட்டி
180. யா/தெ/6240 திரு. கந்தையா சின்னத்தம்பி
181. யா/தெ/6294 திரு. சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
182. யா/தெ/6315 திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பர்
183. யா/தெ/6317 திரு. கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
184. யா/தெ/6391 திரு. வல்லிபுரம் இராசநாயகம்
185. யா/தெ/6445 திருமதி. ஆச்சிக்குட்டி தியாகராசா
186. யா/தெ/6447 திருமதி. பாக்கியம் வேலுப்பிள்ளை

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/ச/ 2 திரு. பொன்னையா கனகரட்ணம்
2. யா/ச/ 116 திரு. வயிரவி முத்தையா
3. யா/ச/ 139 திரு. பொன்னையா நவரத்தினம்
4. யா/ச/ 155 திரு. பொன்னையா தங்கராசா
5. யா/ச/ 257 திரு. நாகமணி கந்தையா
6. யா/ச/ 263 திரு. வயிரவி இராமு
7. யா/ச/ 360 திரு. முருகேசு கார்த்திகேசு
8. யா/ச/ 387 திரு. முத்தையா விஜயமோகன்
9. யா/ச/ 390 திரு. வயிரவன் முருகன்
10. யா/ச/ 403 திரு. அப்பாத்துரைஐயர்
இரத்தினசாமிக்குருக்கள்
11. யா/ச/ 447 திரு. இராமலிங்கம் சுந்தரம்
12. யா/ச/ 463 திருமதி. ஈஸ்வரிதேவி சுப்பிரமணியம்
13. யா/ச/ 537 திருமதி. ஞானமலர் தவராசா
14. யா/ச/ 541 திருமதி. சறோஜினிதேவி
சிவஞானரத்தினம்
15. யா/ச/ 552 திரு. நமசிவாயம் தில்லையம்பலம்
16. யா/ச/ 553 திரு. கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்
17. யா/ச/ 557 திருமதி. அன்னலெட்சுமி
செவ்வந்திநாதன்
18. யா/ச/ 605 திரு. ஆறுமுகம் நாகலிங்கம்
19. யா/ச/ 625 திரு. சிவமயம் அருள்மயம்
20. யா/ச/ 640 திரு. முத்துக்குமாரு மயில்வாகனம்
21. யா/ச/ 646 திருமதி. அன்னம்மா சின்னத்தம்பி
22. யா/ச/ 676 திரு. கணபதி கிஸ்னர்
23. யா/ச/ 697 திரு. வைத்திலிங்கம் கணபதிமுத்து
24. யா/ச/ 703 திருமதி. அமிர்தம் சங்கரப்பிள்ளை
25. யா/ச/ 838 திருமதி. சிவஞானவதியார் கனகசபை
26. யா/ச/ 877 திரு. சபாபதிப்பிள்ளை அரியராசா
27. யா/ச/ 890 திரு. சண்முகம் பக்கிரிசாமி
28. யா/ச/ 963 திரு. அருணாசலம் ஆறுமுகம்
29. யா/ச/ 965 திரு. சின்னப்பொடி மாரிமுத்து
30. யா/ச/ 1011 திரு. வல்லிபுரம் அம்பலவாணநாதன்
31. யா/ச/ 1033 திரு. தில்லையம்பலம்
கணபதிப்பிள்ளை
32. யா/ச/ 1114 திரு. பொன்னுத்துரை தயாபரன்
33. யா/ச/ 1215 திரு. கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்
34. யா/ச/ 1270 திருமதி. திலோத்தம்மை நவரத்தினம்
35. யா/ச/ 1360 திரு. ஆறுமுகம் குமாரசாமி
36. யா/ச/ 1370 திருமதி. சிவக்கொழுந்து
வேலுப்பிள்ளை
37. யா/ச/ 1373 திரு. அம்பலவாணபிள்ளை
சச்சிதானந்தன்
38. யா/ச/ 1466 திரு. குணரத்தினம் ராஜமோகன்
39. யா/ச/ 1506 திரு. வைத்திலிங்கம் சபாரத்தினம்
40. யா/ச/ 1593 திரு. மாணிக்கம் சிவலிங்கம்
41. யா/ச/ 1599 திருமதி. பொன்னம்மா சோமசுந்தரம்
42. யா/ச/ 1650 திருமதி. இரத்தினம்மா இராசதுரை
43. யா/ச/ 1676 செல்வி. கண்மணியம்மா இராமலிங்கம்
44. யா/ச/ 1701 திருமதி. மகேஸ்வரி இராஜபட்சம்
45. யா/ச/ 1731 திரு. குணரத்தினம் கந்தையா
46. யா/ச/ 1744 திரு. முருகேசு சுப்பிரமணியம்
47. யா/ச/ 1807 திரு. வயிரமுத்து கணபதிப்பிள்ளை
48. யா/ச/ 1808 திரு. வயிரமுத்து கணபதிப்பிள்ளை
49. யா/ச/ 1820 திரு. கந்தையா சபாபதிப்பிள்ளை
50. யா/ச/ 1834 திரு. நாகலிங்கம் அமிர்தலிங்கம்
51. யா/ச/ 1836 திரு. முருகேசு கிருஷ்ணபிள்ளை
52. யா/ச/ 1856 திரு. தியாகராசா அரசரத்தினம்
53. யா/ச/ 1881 திருமதி. தங்கரத்தினம் முருகேசு
54. யா/ச/ 1896 திரு. கந்தையா நாகராசா
55. யா/ச/ 1903 திரு. வேலுப்பிள்ளை இராமநாதன்
56. யா/ச/ 1907 திருமதி. மகேஸ்வரி நடராசா
57. யா/ச/ 1958 திரு. அம்பலவாணர் சிதம்பரப்பிள்ளை
58. யா/ச/ 2004 திருமதி. அன்னமுத்து பொன்னுத்துரை
59. யா/ச/ 2022 திரு. வினாசித்தம்பி செல்லையா
60. யா/ச/ 2033 திரு. சுப்பையாகுருக்கள்
சண்முகரத்தினசர்மா
61. யா/ச/ 2040 திரு. பொன்னம்பலம் மண்டலசேகரம்
62. யா/ச/ 2045 திரு. செல்லப்பா நடராசா
63. யா/ச/ 2073 திரு. ஆறுமுகம் கனகரத்தினம்
64. யா/ச/ 2126 திரு. ஆறுமுகம் குமாரசுவாமி
65. யா/ச/ 2131 திரு. கனகசபாபதி நவரத்தினராசா
66. யா/ச/ 2195 திருமதி. செல்லம்மா செல்லையா
67. யா/ச/ 2237 திருமதி. தவமணி சிவலிங்கம்
68. யா/ச/ 2337 திருமதி. ஜெயகௌரி செல்வராசு
69. யா/ச/ 2379 திரு. கந்தசாமி கேசவதாசன்
70. யா/ச/ 2418 திருமதி. திலகவதி வீரசிங்கம்
71. யா/ச/ 2446 திரு. அருணாசலம் சபாரத்தினம்
72. யா/ச/ 2537 திருமதி. லோகேஸ்வரி
கணபதிப்பிள்ளை
73. யா/ச/ 2592 திரு. பொன்னையா ஜெயராசா
74. யா/ச/ 2593 திரு. வயிரமுத்து நடராசன்
75. யா/ச/ 2606 திரு. ஐயாத்துரை தெய்வேந்திரம்
76. யா/ச/ 2608 திருமதி. நேசதேவி இராசதுரை
77. யா/ச/ 2645 செல்வி. திவாஜினி நல்லையா
78. யா/ச/ 2673 திரு. பொன்னையா செல்வநாயகம்
79. யா/ச/ 2760 திரு. சுப்பையா கதிரவேலு
80. யா/ச/ 2801 திரு. வைரவநாதன் பொன்னையா
81. யா/ச/ 2827 திரு. கந்தர் சின்னத்துரை
82. யா/ச/ 2858 திரு. சின்னக்குட்டி செல்லத்துரை
83. யா/ச/ 2896 செல்வி. மங்கையற்கரசி பொன்னையா
84. யா/ச/ 2912 செல்வி. சோதிமலர் பரஞ்சோதி
85. யா/ச/ 2956 திரு. சின்னத்தம்பி துரை
86. யா/ச/ 2959 செல்வி. பூரணம் நாகலிங்கம்
87. யா/ச/ 2961 திருமதி. மீனலோசனி இராசரத்தினம்
88. யா/ச/ 2971 திரு. கிருஷ்ணர் சின்னத்துரை
89. யா/ச/ 3001 திரு. தில்லையம்பலம் சுப்பையா
90. யா/ச/ 3004 திரு. கிருஷ்ணர் துரைசுவாமி
91. யா/ச/ 3027 திருமதி. இராஜேஸ்வரி கந்தவனம்
92. யா/ச/ 3054 திரு. கிருஸ்ணர் வைரமுத்து
93. யா/ச/ 3081 திரு. அண்ணாமலை பாலசிங்கம்
94. யா/ச/ 3190 திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை
தில்லையம்பலம் நடராசா
95. யா/ச/ 3266 திரு. வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை
96. யா/ச/ 3270 திரு. ரோணி கணேசன்
97. யா/ச/ 3313 திருமதி. மங்கையற்கரசி கதிரவேல்
98. யா/ச/ 3322 திரு. ஞானப்பிரகாசம் கதிர்காமநாதன்
99. யா/ச/ 3344 திருமதி. விசாலாட்சி பேரம்பலம்
100. யா/ச/3388 திரு. செல்லப்பா அப்பாத்துரை
101. யா/ச/3389 திரு. கதிரவேலு கந்தையா
102. யா/ச/3395 திரு. முத்துத்தம்பி கந்தசாமி
103. யா/ச/3401 திரு. முத்துசாமி கணேசநாயகம்
104. யா/ச/3410 திரு. செல்லப்பா அப்பாத்துரை
105. யா/ச/3454 திரு. கந்தையா சண்முகநாதன்
106. யா/ச/3487 திரு. கறுவல்தம்பி எதிர்நாயகம்
107. யா/ச/3493 திரு. தம்பிப்பிள்ளை துரைசிங்கம்
108. யா/ச/3537 திரு. நமசிவாயம் கணேசலிங்கம்
109. யா/ச/3556 திரு. அருணாசலம் கந்தையா
110. யா/ச/3564 திரு. சபாபதிப்பிள்ளை இராசரத்தினம்
111. யா/ச/3576 திரு. திருஞானம் மனோகரன்
112. யா/ச/3592 திரு. முத்துக்குமாரு ஆறுமுகம்
113. யா/ச/3593 திரு. முத்துக்குமாரு ஆறுமுகம்
114. யா/ச/3626 திரு. அப்பாக்குட்டி குணரத்தினம்
115. யா/ச/3653 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
116. யா/ச/3666 திரு. முத்துக்குமாரு தருமலிங்கம்
117. யா/ச/3770 திரு. இராமசாமி நாகலிங்கம்
118. யா/ச/3843 திரு. மார்க்கண்டபிள்ளை
சிவசுப்பிரமணியம்
119. யா/ச/3852 திரு. நாகலிங்கம் நடராசா
120. யா/ச/3854 திரு. கந்தையா பஞ்சலிங்கம்
121. யா/ச/3908 திரு. இராமநாதன் புத்திரராசா
122. யா/ச/3953 திருமதி. யோகேஸ்வரி பத்மகுமாரன்
123. யா/ச/3992 திரு. தம்பியப்பா திருவருட்செல்வம்
124. யா/ச/3997 திரு. அப்புக்குட்டி வாலசிங்கநாயகம்
125. யா/ச/4031 செல்வி. தில்லைநாயகி கந்தவனம்
126. யா/ச/4132 திரு. ஆறுமுகம் முருகேசு
கிருஷ்ணபிள்ளை
127. யா/ச/4138 செல்வி. நவமணிதேவி துரையப்பா
128. யா/ச/4181 திரு. வெற்றிவேலு பாலசுப்பிரமணியம்
129. யா/ச/4229 திருமதி. திரவியமலர் செல்வராசா
130. யா/ச/4291 திரு. துரைசிங்கம் கெங்காதரன்
131. யா/ச/4335 திரு. இராசதுரை ஸ்கந்த விஜிகுமார்
132. யா/ச/4392 திரு. வேலுப்பிள்ளை முத்துத்தம்பி
133. யா/ச/4466 திரு. முத்தையா சீவரத்தினம்
134. யா/ச/4523 திருமதி. திருஞானதேவி சிவப்பிரகாசம்
135. யா/ச/4548 திருமதி. சீதாலட்சுமி முருகுப்பிள்ளை
136. யா/ச/4581 திரு. கந்தையா இராமமூர்த்தி
137. யா/ச/4625 திரு. வேலாயுதர் கந்தர்
138. யா/ச/4678 திருமதி. பராபரி மதியாபரணம்
139. யா/ச/4705 திரு. இரகுநாதன் தில்லைநாதன்
140. யா/ச/4745 திருமதி. இராசாத்தியம்மா நாகராசா
141. யர/ச/4805 திரு. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்
142. யா/ச/4824 திரு. முருகர் நாராயணன்
143. யா/ச/4835 திரு. நாகலிங்கம் நடராசா
144. யா/ச/4860 திரு. சின்னட்டி ஆறுமுகம்
145. யா/ச/4861 திருமதி. செல்லம் கார்த்திகேசு
146. யா/ச/4891 திரு. முத்துக்குமாரு அருணாசலம்
147. யா/ச/4915 திரு. வீரகத்தி கந்தையா
148. யா/ச/4935 திரு. விசுவநாதர் கந்தையா
149. யா/ச/4958 திருமதி. பரமேஸ்வரி வைரமுத்து
150. யா/ச/4960 திரு. சின்னத்ம்பி வல்லிபுரம்
151. யா/ச/4978 திரு. வேலன் கந்தையா
152. யா/ச/4994 திரு. முருகன் கதிரவேலு
153. யா/ச/5052 திரு. செல்வநாயகம் ஆறுமுகம்
154. யா/ச/5084 திருமதி. இரத்தினேஸ்வரி இரத்தினம்
155. யா/ச/5087 திரு. வைரவி செல்லத்துரை
156. யா/ச/5091 திரு. செல்லப்பா சீவரத்தினம்
157. யா/ச/5098 செல்வி. புஸ்பதேவி செல்லத்துரை
158. யா/ச/5135 திரு. பிள்ளையான் சின்னத்துரை
159. யா/ச/5182 திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு
160. யா/ச/5235 திரு. வேலுப்பிள்ளை கனகசபாபதி
161. யா/ச/5247 திருமதி. இராசமலர் சிவப்பிரகாசம்
162. யா/ச/5258 திரு. மாணிக்கம் மகேந்திரன்
163. யா/ச/5307 திருமதி. அன்னம்மா முத்தையா
164. யா/ச/5320 திருமதி. சிவக்கொழுந்து தம்பையா
165. யா/ச/5380 திருமதி. பொன்னம்மா கந்தையா
166. யா/ச/5390 திரு. சபாரத்தினம் நடராசா
167. யா/ச/5433 திரு. சதாசிவம் செல்லையா
168. யா/ச/5447 திருமதி. பொன்னம்மா சண்முகநாதன்
169. யா/ச/5470 திரு. செல்லர் பூபாலசிங்கம்
170. யா/ச/5480 திருமதி. தெய்வானைப்பிள்ளை
மாரிமுத்து.
171. யா/ச/5539 திரு. வினாசித்தம்பி கந்தையா
172. யா/ச/5551 திருமதி. சிவகாமிப்பிள்ளை தம்பையா
173. யா/ச/5578 திரு. சுப்பிரமணியம் அருளம்பலம்
174. யா/ச/5585 திரு. சின்னையா மார்க்கண்டேயர்
175. யா/ச/5598 திரு. இராசகாரியார் கந்தசாமி
176. யா/ச/5601 திரு. இளையதம்பி செல்லையா
177. யா/ச/5609 திரு. துரையப்பா சிவநேசராசா
178. யா/ச/5610 திருமதி. சுசீலா ஆனந்தராசா
179. யா/ச/5611 திருமதி. மீனாட்சிப்பிள்ளை சுப்பையா
180. யா/ச/5615 திரு. இலட்சுமணன் நடராசா
181. யா/ச/5618 திரு. செல்லர் கந்தையா
182. யா/ச/5676 திருமதி. தங்கம்மா கனகசபை
183. யா/ச/5685 திருமதி. செல்லம்மா கந்தையா
184. யா/ச/5736 திரு. நடராசா கந்தஞானியார்
185. யா/ச/5748 திரு. இராமநாதர் கந்தமுத்து
186. யா/ச/5806 திரு. நாகலிங்கம் வேலுப்பிள்ளை
187. யா/ச/5837 திரு. கந்தசாமி குமரகுரு
188. யா/ச/5846 தீரு. வேலன் மினாசி
189. யா/ச/5887 திருமதி. இரஞ்சிதராணி வசந்தகுமார்
190. யா/ச/5897 திரு. வல்லிபுரம் நல்லையா
191. யா/ச/5902 திரு. வையாபுரி அப்புத்துரை
192. யா/ச/5919 திரு. கணபதிப்பிள்ளை சிவசம்பு
193. யா/ச/5949 திரு. தம்பையா வீரகத்தி
194. யா/ச/5951 திருமதி. ஜெயந்தி குலேந்திரன்
195. யா/ச/6004 திருமதி. தவபாக்கியம் மதியாபரணம்
196. யா/ச/6059 திரு. அருணாசலம் நடராசா
197. யா/ச/6060 திருமதி. நாகம்மா செல்லையா
198. யா/ச/6066 திருமதி. கனகம்மமா பாலசிங்கம்
199. யா/ச/6079 திரு. இராசா சுப்பிரமணியம்
200. யா/ச/6085 திருமதி. நாகம்மா கனசபை
201. யா/ச/6104 திரு. துரைராசசிங்கம் நிர்மலசிங்கம்
202. யா/ச/6172 திருமதி. அன்னலட்சுமியம்மா
சின்னத்துரை
203. யா/ச/6181 திரு. சிவந்தான் சிவந்தான்
204. யா/ச/6216 திரு. வைரவப்பிள்ளை மயில்வாகனம்
205. யா/ச/6275 திரு. பரராசசேகரம் கோகிலதாஸ்
206. யா/ச/6315 திரு. கனகசபை கந்தையா

(மிகுதி நாளை)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கனேடியத் தூதுவருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் வலியுறுத்தவுள்ளதாக கனேடியத்தூதுவர் வலறி ரேமனன் தமிழத்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் நேற்றுக் காலை 10 மணிக்கு கனேடிய நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தில் தூதுவரைச் சந்தித்துப்பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் கனடா மிகவும் ஆர்வமாகவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளது. இது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புலிகளையும், அரசாங்கத்தையும் வலியுறுத்தவுள்ளதாகவும் கனேடியத் தூதுவர் வலறி ரேமனன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். அது தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என்றும் -

கிழக்கில் ஏற்படும் மோதல் நிலைகள் போர்நிறுத்த உடன்பாட்டை முறித்துவிடும் என்பதால் உடனடியாக சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கக்கோ, சர்வதேச சமூகம் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் வற்புறுத்தவேண்டும் எனவும், கூட்டமைப்பினர் கனேடியத்தூதுவரைக் கேட்டுக்கொண்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட கனேடியத்தூதுவர் சர்வதேச சமூகத்தின் அக்கறையையும் இந்தச் சந்திப்பின் போது வெளிப்படுத்தினார்.

# தமிழ்மக்களின் நன்மைக்கே அரசுடன் இணைந்தோம்!

## ஆறுமுகன் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் மக்களின் அபிவிருத்தி என்பனவற்றை முன்னிட்டே, அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதாக இ.தொ.கா காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றதையடுத்துச் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே ஆறுமுகன் தொண்டமான் இவ்வாறு கூறினார்.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அமைச்சராகவும், பிரதியமைச்சராகவும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

தோட்ட, வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக முத்து சிவலிங்கம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அந்த அமைச்சின் பிரதியமைச்சராக எம்.எஸ். செல்லச்சாமி பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

# நெதர்லாந்துத் தூதுவர் யாழ்ப்பாணம் வருகிறார்!

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜெறு ஏக் செலென்சி நாளை மறுதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் எதிர்வரும் திங்கட்கிழமை காலை அரச திணைக்கள அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன் யாழ்.குடாநாட்டின் சில பகுதிகளுக்குச் சென்று பார்வையிடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மதியம் 1.30 மணியளவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடம் ஒன்றிற்கும் நெதர்லாந்து நாட்டுத் தூதுவர் அடிக்கல் நாட்டவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் 2 ஆவது பட்டியலில் இணைக்கப்படுவர்

## நிதியமைச்சின் முகாமைத்துவப் பணிப்பாளர் உறுதி

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் வெளிவராத உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ டிப்ளோமாதாரிகளை இரண்டாவது தடவையாக தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் இணைத்துக்கொள்வதாக நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார்.

பட்டதாரிகளை அரசசேவையில் இணைத்துக்கொள்வதற்காக இரண்டாவது தடவையாக வெளியிடப்பட்ட பட்டியலில் பெயர் வெளிவராத உயர்தேசிய கணக்கியல் மற்றும் வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குமாறு பட்டதாரிகள் சங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர், இவர்கள் தொடர்பான பெயர் விவரங்கள் இருவாரங்களில் அறிவிக்கப்படும் என்றும், இரண்டாவது பட்டியலில் இடம்பெற்றவர்களுக்கான பயிற்சியின்போது இவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவித்தார்.

சங்கத்தின் செயலாளர் வி.தயாபரன் தலைமையிலான குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# காணாமற்போனோர் வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற காணாமல் போனோர் தொடர்பான வழக்கு விசாரணைகள் அடுத்தமாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பாலசுப்பிரமணியம் நேற்றும், நேற்று முன்தினமும் 1996-97 காலப் பகுதிகளில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பான 21 விசாரணைகளை நடத்தினார்.

இவற்றில் ஏழுபேரின் விசாரணைகள் நேற்று முன்தினமும், 14 பேரின் விசாரணைகள் நேற்றும் இடம்பெற்றது.

நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கும், நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்தமாதம் 13 ஆம் திகதிக்கும் நீதிபதி ஒத்திவைத்தார்.

மனுதாரர் சார்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணி ரெமிடியன்ஸ், சட்டத்தரணி யோகேஸ்வரன் , சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும், எதிர்த்தரப்பில் சட்டத் தரணிகளான கப்டன் குருப்பு, விக்கிரம ஆராச்சி ஆகியோரும் ஆஜராகியிருந்தனர். (29)

# மிலேனியம் சிற்றி அறிக்கை தவறானதென நீதிமன்றில் மனு

## இராணுவ அதிகாரி தாக்கல்

அத்துருகிரிய-மிலேனியம் சிற்றியில் இயங்கிவந்த இராணுவ புலனாய்வுப் பிரிவின் இரகசிய மறைவிடத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையின் - சில அம்சங்களை ரத்துச் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இராணுவ அதிகாரியான பராக்கிரம திசநாயக்க என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதியாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரான வி.ஜெயவிக்கிரமவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இநத மனுவில் மிலேனியம் சிற்றி இராணுவ புலனாய்வுப்பிரிவு குறித்த தகவலை தான் சமர்ப்பித்ததாக ஆணைக்குழுவின் தலைவர், பொய்யான தகவலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இந்த அறிக்கையின் காரணமாக தனக்கு எதிரான இராணுவச் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கை இடம்பெறவிருக்கிறது.

இதனால், இந்த அறிக்கையின் சில சரத்துக்களை ரத்துச்செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கேணல் பராக்கிரம திசநாயக்க இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதியின் பேச்சாளர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நாளைமறுதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயும் நோக்கிலேயே அவர் இங்கு வருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திங்கட்கிழமை காலை பலாலி விமான நிலையத்திற்கு வருகைதந்து, அங்கிருந்து யாழ்.மாவட்ட செயலகத்துக்குச் சென்று செயலக அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியபின் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

## சமாதான ....

பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடவிருப்பதாகவும் நோர்வேத் தூதரக அறிக்கையில் கூறப்பட்டது.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்களில் விரைவில் திருப்பம் ஒன்று ஏற்படவிருப்பதாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

## சீன பாதுகாப்பு...

டொனால்ட் பெரேரா, கடற்படைத் தளபதியும் - கூட்டுப் படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரே சீனாவின் ஆயுத உற்பத்தி நிறுவனமான றொனிக்கோவுடன் இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தது. இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்குவது குறித்து ஆராயவே, சீனப்பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததாகத் தெரியவருகிறது.

## தலைமையும் - தமிழ்....

அந்த வாகனத்திலேயே அந்த இரண்டு உடல்களையும் பணியாளர்கள் அச்சுறுத்தலின் மத்தியில் தம் பாட்டி படைமுகாமுக்கு அருகில் கொண்டுசென்றனர். பின்னர், தாக்க வந்தவர்கள் இரண்டு உடல்களையும் முகாமுக்கு எடுத்துச் சென்றதுடன், இந்த விடயம் தொடர்பாக எவரிடமும் தெரிவிக்கக்கூடாதெனவும் மக் பணியாளர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தநிலையில், மறுநாள் எட்டாம் திகதி 8.30 மணியளவில் படுகாயமடைந்த நான்கு மக் பணியாளர்களும் தமது தளத்துக்குத் திரும்பினர். இதில் காயமடைந்த நால்வரில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மக் பணியாளர்களின் ஸ்ரெச்சருடன் அவர்கள் பயன்படுத்தும் செல்போன்கள் மற்றும் அவர்களது தொலைத்தொடர்பு சாதனம் என்பவற்றையும் தாக்கவந்தவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக மக் பணியாளர்களே உள்ளனர். அத்துடன், தாக்குதலின் போது கொல்லப்பட்ட இரண்டு உடல்களையும் படை முகாமுக்குக் கொண்டுசெல்ல மக் பணியாளர்களின் வாகனத்தையே பயன்படுத்தியுமுள்ளனர்.

எனவே, இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இலங்கைப் படையினர் தான் என்பது தெளிவாகவே தெரிகின்றது.

இதுபோன்ற தாக்குதல் நடைபெற்றது இதுதான் முதற்தடவை அல்ல என்பதும் உங்களுக்குத் தெரியும். இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் யுத்தநிறுத்தத்தை சீர்குலைப்பதற்கான வழிவகைகளாகும்.

எனவே, இந்தச் சம்பவங்களால் தமிழ் மக்களும் அவர்களது தலைமையும் பொறுமையிழந்து வருகின்றன. இவ்வாறான சம்பவங்களில் படையினர் ஈடுபடுவதன் மூலம் விடுதலைப் புலிகளை சினமூட்டி யுத்த நிறுத்தத்துக்கு குழப்பத்தை ஏற்படுத்த முனைகின்றார்களோ என்ற பொதுவான அச்சமும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

எனவே, சமாதான முயற்சியில் மிகப் பெரிய ஆர்வமுள்ளவர்களாக உள்ள நீங்கள் - இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கச்சதீவில் இறக்கிவிடப்பட்ட....

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் படகில் நேற்றுபிற்பகல் 2 மணிக்கு சென்றிருந்த அதிகாரிகள், அங்கு நின்றிருந்த 25 பேரையும் அழைத்து வந்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தங்கவைத்தனர்.

இன்று இவர்கள் யாழ்.செயலகத்துக்கு அழைத்துவரப்பட்டு அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கச்சதீவில் தங்கியிருந்த மீனவர்களும் இவர்களுக்கு குடிநீர் மற்றும் உணவுவகைகளை வழங்கியிருந்தனர்.

இவர்களை ஏற்றிவந்த உதயதாரகை படகுக்கு கடற்படையினர் பாதுகாப்பு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் சிலர் மயக்கமுற்று வருவதால் அவர்களுக்கான சிகிச்சையை நெடுந்தீவு வைத்தியசாலை அதிகாரிகள் வழங்கிவருகின்றனர்.

மீட்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு -

திருகோணமலை - குச்சவெளியைச் சேர்ந்த லோகநாதன் அபிசாகரன் (வயது 33), அபிசாகரன் ஜெகதீஸ்வரி (வயது 22), தனுஷ் (11 மாதம்),குமாரசாமி பாலகுமாரன் (வயது 34).

வவுனியா சாளம்பைக்குளத்தைச்சேர்ந்த யோகராசா பார்த்தீபன் (வயது 33), பார்த்தீபன் தேவகுமாரி (வயது 35), பார்த்தீபன் மீனாம்பாள் (வயது 6), முருங்கன் மன்னாரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை விமலேஸ்வரன் (வயது 33).

திருகோணமலை மூதூரைச் சேர்ந்த பாக்கியராஜ் ஜீவா (வயது 29), பாக்கியராஜ் வளர்மதி (வயது 13), பாக்கியராஜ் விதுஷா (11).

மன்னார் வங்காலையைச் சேர்ந்த பாக்கியம் ஜெயம் பெர்னாண்டோ (வயது 33), ஜெயம் பெர்ணான்டோ சூசிக்றேஸ் சோஷ்சா (வயது 28), ஜெயம் பெர்னாண்டோ மேரி ஜெஸ்ரினா (வயது 7), ஜெயம் பெர்னாண்டோ ஜெனிஸ் (வயது 5).

வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த நடேசன் விநாயகமூர்த்தி (வயது 33), விநாயகமூர்த்தி மைதிலி (வயது 29).

வவுனியா - செட்டிக்குளத்தைச் சேர்ந்த சாந்தியோகு யூட் செல்டன் (வயது 28), சேதுராம் பாலேந்திரராம் (வயது 21).

புதுக்குளம் வவுனியாவைச் சேர்ந்த இமானுவேல் ஸ்ரீபன் (வயது 36).

பேசாலை மன்னாரைச் சேர்ந்த முகமது முஸ்தபா (வயது 47), கங்கைக்குளம் வவுனியாவைச் சேர்ந்த சுப்பையா நல்லைமுத்து (வயது 43), பேசாலையைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் றொபேட் (வயது 29), பரந்தனைச் சேர்ந்த மூக்கையா துரைராசா (வயது 49), வவுனியா - செட்டிக்குளத்தைச் சேர்ந்தவர்களான சிவசுப்பிரமணியம் நகுலேஸ்வரன் (வயது 32), இராமச்சந்திரன் வைத்தியநாதன் (வயது 52), முருங்கனைச் சேர்ந்த துரைராஜ் சசிகலா (வயது 24), புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஜெயதாஸ் (வயது 30) ஆகியோரே நெடுந்தீவுக்கு வந்தவர்களாவர். (113)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.